சருக்கரை v. சக்கரை.

சருமம் v. சேர்மம்.

சருவம், சருவப்பானை, a copper-pot.

சருவு, மலைச்சருவு, the side of a hill. அந்தத்தேசத்துச்சருவிலேகப்பலொதுங்கிற்று, the ship has been driven to the coast of that country.

சருவுகிறது, to caress, to fondle, to wheedle.

சருவொட்டி v. சருகோட்டி.

சரேரெனகிறது, to rush as leaves etc.

சலக்கிடுகிறது v. சலவையிடுகிறது.

சலக்கம், சலக்கமனை, சலக்கஅறை, the privy; the bathing-room. சலக்கமனைக்குப்போகிறது, to go to the necessary house. சலக்கமாடுகிறது, to bathe.

சலக்கழிவு, an abatement in favor of the debtor. வட்டியிலேசலக்கழிவுபண்ணுகிறது, to abate some part of the interest.

சலங்கு, a boat. சலங்குக்காரர், boats-people. சலங்குநடை, a trip which a boat makes going and coming. சலங்கிலேற்றுகிறது, to put in a boat. சலங்குவிடுகிறது, to give a boat.

சலங்கை v. சதங்கை.

சலசலப்பு. சலசலவெனகிறது, the rushing of palmyra-trees etc.

சலசலவென்றோடுகிறது, the murmuring of water running through a channel.

✦ சலம் (jalam) water; urine. சலதோஷம், distemper arising from humors in the body. சலசாதி, creatures living in the water. சலப்பிரளயம், inundation. சலதாரை, சலத்துவாரம், a kennel thro' a wall etc. சலத்துவாரம், the passage of the urine. சலபானம்பண்ணுகிறது, to drink water. சலயந்திரம், water-works, hydraulicks. சலக்கழிச்சல், looseness.

✦ சலம் (chalam) obstinacy. சலம்பிடிக்கிறது, சலமொட்டுகிறது, to be firmly resolved to pursue a work. சலஞ்சாதிக்கிறது, to affirm or deny obstinately.

சலவாதி, an apparitor, a beadle. சலவாதிக்குப்போகிறது, to go to make water.

சலவையிடுகிறது, to nib, cut, castrate or geld an animal, *men and bullocks excepted.* சலவன், சலவன்பன்றி, a gelded boar, a barrow-pig.

சலவை, bleaching of cloth; a great cold in the body. சலவைபண்ணுகிறது, to bleach or whiten in the sun. சலவைஅமுங்கவைக்கிறது, to sprinkle or soak the clothes for bleaching. சலவைப்புடவை, white cloth. சலவைக்கல்லு, *a kind of a stone.*

சலாகை, a surgeon's probe; a ramrod. சலாகைபோடுகிறது (விடுகிறது, பார்க்கிறது) to probe a wound.

✦ சலாக்கியம், prime, excellent, eximious. என்னிலும்பார்க்கநீசலாக்கியமோ, art thou better than I?

சலாபம், the fishing for pearls. சலாபத்துறை, the place for pearl-fishing. சலாபங்குளிக்கிறவன், a diver after pearls, a pearl-fisher. சலாபத்துக்குப்போகிறது, to go to the pearl-fishery.

✦ சலாம், pease (*a saluting word.*) சலாம்

பண்ண

பண்ணுகிறது (சொல்லுகிறது) to salute, to compliment by lifting the hand up to the forehead.

சலிக்கிறது, to grow tired, disgusted, dejected. சலித்துக்கொண்டிருக்கிறது, சலிப்பாயிருக்கிறது, to be sad, melancholy, dejected. சலிக்கச்சாப்பிடுகிறது, to eat till the meat grows unpalatable or nauseous. அதுஎனக்குச்சலித்துப்போச்சுது, I am grown tired with it. கைசலிக்கஎழுதுகிறது, to write till the hand is tired. மனஞ்சலியாதவன், an unwearied, indefatigable man.

சலிக்கிறது, to sift. சலித்துப்பார்க்கிறது to sift, to searce or garble *something*. சலித்தெடுக்கிறது, to find *a thing* by searcing.

சலிப்பு, loathing, disgust, displeasure, sadness. சலிப்பினாலே, out of disgust. சலிப்பாற்றுகிறது, சலிப்பாற்றுகிறது, to soften, to dispel, or remove sorrow.

✚ சலிலம், water.

சலுகை, protection, patronage, the power of a person whom you rely upon. சலுகையினாலே பேசுகிறது, to appear before a person without fear relying on the protection of another. சலுகைக்காரன், சலுகைமனுஷன், a man of authority able to afford protection. சலுகைகூட்டிக்கொண்டுவந்தான், he brought a protector with him.

சல்லடம், short drawers, not reaching to the knees. சல்லடக்காரன், சல்லடம்போட்டுக்கொள்ளுகிறவன், one that wears short drawers covering only the lumbary parts.

சல்லடை, a large sieve, a bolter. சல்லடையிடுகிறது, to sift.

சல்லா, thin woven fine cloth.

சல்லாபம், a chapter.

சல்லாரிக்கட்டை, *a kind of wood*.

சல்லி, broken tiles, little stones; lies, knacks, toys, idle talk, quibble. சல்லிபேசுகிறது, to prattle nonsense. சல்லிவிரைக்கிறது (அள்ளுகிறது) to spread false news.

சவங்குகிறது, சவுங்குகிறது, to come short, to fall below, to find one's self disappointed; to be unsuccessful.

சவடிக்கடுக்கன், an ear-ornament *so called*.

சவட்டுகிறது, to kick.

சவண்டல்மரம், *the name of a foreign tree*.

சவதம் v. சபதம்.

சவதரிக்கிறது v. சவுதரிக்கிறது.

✚ சவம், a dead body, a corpse. சவசேமம், the interment of a corps.

சவரணை, elegancy, neatness.

✚ சவரம், shaving. சவரம்பண்ணுகிறவன், சவரகன், a barber. சவரம்பண்ணிக்கொள்ளுகிறது, to get one's self shaved. சிரசுசவரம்பண்ணுகிறது, to shave the head.

சவலை, சவலைப்பிள்ளை, a sucking child growing lean by the mother's being pregnant.

சவளம், a lance, a pike. சவளக்காரர், pikemen

சவளிக்கடை, a mercer's shop.

சவளுகிறது, to be flexible, to bend.

சவனம் v. சகுனம்.

சவாது, civet. சவாதுப்பூனை, சவாதுப்பிள்ளை, a civet-cat.

சவிர்சங்கு, a cannon of a small size.

✚ சவீரம், sublimate mercury.

✚ சவுகரியம், சோகரியம், delightful, pleasing. சவுகரியக்காரன், a charming person.

சவுக்கம், square. சவுக்கக்கடுக்கன், a *kind of* ear-rings.

சவுக்காரம், *a kind of* soap. சவுக்காரப்பிறுக்குப்பண்ணுகிறது, to be cleanly dressed. சவுக்காரப்பிறுக்கனுயதிரிகிறது, to walk about cleanly dressed.

✚ சவுக்கியம், choice, goodly, delicious; wholesome. சவுக்கியக்காரன், one that enjoys health and wealth.

சவுக்கு, a horse-whip.

சவுக்கை, சவுக்கைமேடை, a square place open on all sides, erected to sit upon.

சவுகை, cheap.

சவுங்குகிறது v. சவங்குகிறது.

சவுமணை v. சலக்சமணை.

✚ சவுசனியம், friendship, amity, familiarity.

சவுட்டுமண், earth making a kind of lie.

சவுதம் v. சபதம்.

சவுதரிக்கிறது, சவதரிக்கிறது, to acquire, to gain, to win; to provide, to procure; to maintain.

சவதாகிரி, a horse-dealer. சவுதாகிரிக்குதிரை, a horse that is to be sold.

✚ சவுதாயம் v. சமுதாயம்.

சவுத்து, a muster, a pattern. சவுத்தாயதிருக்கிறது, to perform *a work* neatly.

✚ சவுந்தரியம், beauty. சவுந்தரியன் (*fem.* சவுந்தரி) a fair person.

✚ சவுரியம், strenuousness, bravery, valiantness. சவுரியவான், a valiant man, a hero. சவுரியப்பிரதாபம், pomp, glory.

சவ்வு, any thing like a caul. சவ்வுத்தோல், a mere skin. சவ்வாய்ப்போகிறது, சவ்வாயவுடிந்துபோகிறது, to grow lean and crumpled. சவ்வாயவடித்துப்போடுகிறது, to starve *a person*.

சழிந்துபோகிறது, to grow decayed, crumpled or wrinkled by age.

சழுங்கலாய்ப்போகிறது, to grow blockish, stupid, doltish.

சள்சள்ளெனுகிறது, to chatter, to prattle; tittle-tattle.

சளி, a cold, a snivelling cold, a rheum or catarrh; the snot or filth of the nose. சளிபிடித்திருக்கிறது, to have catched cold, to have got a rheum (or rheumatism.) சளியைச்சிந்துகிறது (சிந்திப்போடுகிறது) to blow or wipe the nose. சளிக்கிறது, சளிக்கட்டளைகிறது, to grow macerated by water; to be apt to ret. சளிக்கவார்க்கிறது, to macerate by water.

சளுக்கு, arrogance, arrogancy. வாய்ச்சளுக்கு, swaggering, bragging, boasting. சளுக்குப்பண்ணுகிறது, to be proud, arrogant; to carry one's self proudly, to wear a tawdry dress. சளுக்கன், சளுக்குக்காரன் (*fem.* சளுக்கி) a lofty or proud person.

சளுவாயன், a talkative man, a prattler.

சளுகிறது, சளர்விடுகிறது, to slacken, to relent; to break wind backward.

சளுவல், an intricate business or account; intricacy. சளுவலையக்கழிக்கிறது (தீர்த்துப்போடுகிறது) to extricate a thing. சளுவலாயக்கிடக்குது, things are intricate. சளுவல்க்காரன், one that embroils or disorders things. அவனோடேசளுவல்கூடாது, it is not advisable to have any dealings with him.

சறங்கு, an overseer of sailors, boats-people, lascars etc.

சறடு, thread, twine, twist. சறடுமுறுக்குகிறது (திரிக்கிறது) to twist or twine thread; to make tricks. சறடுகோர்க்கிறது, to thread a needle. பொற்சறடு, a golden neck-lace.

சறணம் v. சரணம்.

சறுகாடு, very sour.
சறுக்கிறது (சறுக்குகிறது) சறுக்கிப்போகிறது, to slip out of the hands; to glide.
சறுக்குகிறது, சறுக்கிவிழுகிறது, சறுக்குணர்கிறது. சறுக்கலிலேயகப்படுகிறது, to glide; to slide and fall. சறுக்கல், slippery.
• சர்வம், சர்வமும், all, the whole, universal, general. சர்வசங்காரநாள், the day of the universal destruction of the world; doom's day. சர்வசனப்பிரியன், one who is liked by all the people. சர்வத்துக்குமேலானவர், the Almighty. சர்வமானியம், a field free from tax. சர்வவிக்கினனாகிறது, to be unlucky in every thing. சர்வாங்கம், the whole body. சர்வாங்கமும், all sorts of things.
சர்வாபரணமும், all kinds of jewels.
சர்க்கரை v. சக்கரை.
• சற்கருமம், a good work.
சற்குணம், a good nature.
சற்சனன், a good or pious man.
• சர்ப்பம், a serpent.
சர்ப்பனை, சர்ப்பிணை, a malicious trick, a treacherous device; an infernal scheme.
• சர்மம், a skin.
• சனம், people. ஒருசனம், one body. எத்தனைசனம், எத்தனைசனங்கள், how many people or persons. என்னுடைசனத்தார், the people of my family or kindred:
• சனி Saturn *the planet*. சனிக்கிழமை, Saturday. சனிவேதை, the influence of Saturn.
சனிமூலை, north-east.
சனு, favor. சனுவாய், favorably.
சன்னக்காரைபூசுகிறது, to plaster with fine chunam. சன்னக்காரையிட்டுக்கட்டியிருக்குது, it is finely plastered.
• சன்னதம், a pagan's being possessed by the devil, and the oracle or words he utters with violent motions of the head. சன்னதக்காறன், சன்னதமாடுகிறவன் (ஆடுகிறவன்) a possessed whose head twirls about.
• சன்னிதி, the holy place in a temple, the sanctuary, the presence of God.
• சன்னம், fine, thin. சன்னலவங்கப்பட்டை, fine cinnamom. சன்னப்பின்னலானது, very finely twisted.
சன்னி, convulsive-fits. பிரலாபசன்னி, epilepsy. சூதகசன்னி, சுதகசன்னி, a fit of the mother. உள்வீச்சுசன்னி, உள்வீச்சுசன்னி, internal convulsion. புறவீச்சுசன்னி, புறவீச்சுசன்னி, external convulsion. சுதசன்னி, a convulsive-fit caused by lying with a woman after bathing. அலட்டுசன்னி, convulsion accompanied with madness. மூடுசன்னி, convulsion caused by cold, wherein one lies speechless. மாந்தசன்னி, convulsive-fits of children caused by indigestion. கெம்பீரசன்னி, a convulsive-fit accompanied with continual laughing. சன்னிவாதம், சன்னிவாதசுரம், a paralytical disease. சன்னிநாயகன், physick for convulsions.
• சன்னியாசம், celibacy. சன்னியாசம்பண்ணுகிறது, to lead a monastical life. ஆயுதசன்னியாசம், Renunciation of a military life. சமுசாரசன்னியாசம், Renunciation of the matrimonial state.
• சன்னியாசி, one who for religion's sake has renounced the state of matrimony. சன்னியாசிப்பட்டம், a monastical life. சன்னியாசிப்பட்டங்கெட்டவன், one who lost his celibacy.
• சன்னிதானம் the presence in a place. ஒருத்தருடைசன்னிதானத்திலேபோகிறது, to appear before one, or in his presence.
சன்னை, a beck, beckoning.
• சாகசம், strenuousness, stoutness, hardiness. சாகசம்பண்ணுகிறது, to do the business strenuously. சாகசக்காறன், சாகசமானவன், a stout-hearted man. சாகசப்பட்சி, *the name of a bird*.
• சாகரணம், sleeplessness. ராத்திரி சாகரணமிருந்தேன், I did not sleep last night. நீசாகரணமாயிரு, sleep not; be awake (or vigilant.)
சாகாமை, immortality.
சாகப்போகிறது, to remove from a place, to go on a journey.
சாகிறது, செத்துப்போகிறது, to die, to decease. ஒருத்தனைசாகக்கொடுக்கிறது, to lose a person by death. சாகத்துணிந்தான், he laid his life at stake, he risked his life. சாகத்திரிகிறது, to meditate upon killing one's self. செத்தமுகம், a face all in a blush. செத்தமாடு, செத்தநாய், the carcass of a cow, dog etc. செத்தெழுந்து v. எழுந்து. சாவில்லாமை, சாவின்மை, சாகாவரம், immortality. சாக்காலம், சாக்காலம், சாங்காலம், the time of death. அவள்பேரிலேசாகிறான், he loves her excessively. தன்பிள்ளையோடேசாகிறான், he loves his child excessively. அவத்தசாக்காடாய்ச்சாகிறது, to perish by an infamous death. சாவு, the death. சாவுக்குருவி, *the name of* a night-hawk. சாவுபிள்ளைபெற்றவள், சாவுப்பிள்ளைக்காரி, a woman that brought forth a dead child. பயிர்செத்துப்போகுது, the corn in the field perishes, dries up, or dies. செத்துப்போனசெடி, a withered or dead tree.
சாக்கிரதை, diligence, circumspection, vigilancy. சாக்கிரதைப்படுகிறது, to endeavour, to be diligent, to take pains. சாக்கிரதையாய்ப்பார்க்கிறது, to watch for a thing.
சாகை, a place where one makes a short stay.
சாக்கு, போக்குச்சாக்கு, a pretext, a colour, cloak. சாக்குப்போடுகிறது, சாக்கிடுகிறது, to shift the fault off. சாக்குக்காறன், one who shifts the fault off. நொண்டிக்குதிரைக்குச்சறுக்கினதுசாக்கு, stumbling is the excuse of a lame horse.
சாக்கு, a pocket.
சாக்குருவி, an owl.
• சாங்கம், what is perfectly good. சாங்கமாய், safely, perfectly well. சாங்கோபாங்கம், சாங்கபாங்கம், tranquillity, safety. சாங்கோபாங்கமாய், safely, perfectly, entirely.
சாஷ்டி v. சாட்சி.
சாஷ்டாங்கம்பண்ணுகிறது, சாஷ்டாங்கமாய்விழுகிறது, to prostrate one's self for worshipping a person.
• சாஸ்திரம், an art, science, doctrine; sooth-saying. சாஸ்திரி, சாஸ்திரக்காறன், சாஸ்திரவான், சாஸ்திரியன், a learned person, a doctor, one that understands arts. சாஸ்திரம்பார்க்கிறது, to observe signs and seasons.
சாடி, a pot for preserving or keeping something in; a jar.
சாடுகிறது, to rock; to be bent or inclined; to beat severely. அவன்பேரிலேசாடுது, there is

reason for suspecting him. அதைச் சாட்டித் திரிகிறான், his mind is bent to it.

சாடை, a wink, a hint; a slight or faint notice. சாடை காட்டுகிறது, to tip a wink. சாடைப்பண்ணிக் (காட்டி) கூப்பிடுகிறது, to beckon. சாடை சொல்லுகிறது, சாடையாய்ச் சொல்லி வைக்கிறது, சாடையாய்க் காட்டிக்காண்பிக்கிறது, to give a hint. சாடையாய்க் கேட்கிறது, to hear a thing without seeming to take notice of it; to make signs to one for to give a hint. சாடையாய்ப் போய்விடுகிறது, to slink aside, to steal or drop away. சாடையாய்ப் புறப்படுகிறது, to fall drop by drop. காரியஞ் சாடையாய்ப் போச்சுது, the thing passed without being taken much notice of. சாடையாய்ப் பார்க்கிறது, to observe by the way. சாடைக்காரன், one who uses to give information by a wink.

சாட்சி, சாட்சிச்சம்மந்தம், witness, testimony, evidence. சாட்சி, சாட்சிக்காரன், a witness. ஒருத்தனைச் சாட்சி வைக்கிறது, சாட்சி அடிக்கிறது, to take one as an evidence. சாட்சியிடுகிறது, to give evidence. சாட்சியிடுகிறது (சொல்லுகிறது) to witness; to testify, to depose. சாட்சி கேட்கிறது, to hear the witnesses. மனச்சாட்சி, the conscience. அவரவர் மனசு அவரவருக்குச் சாட்சி, every one's conscience is his best witness.

சாட்டி, a whip or scourge. சாட்டியால் அடிக்கிறது, அடிக்கிறது, to scourge or whip.

• சாட்டியம், indisposition.

சாட்டுகிறது, to devolve *a debt, a charge etc.* to another. ஒருத்தன் மேலே குற்றஞ் சாட்டுகிறது, to lay a crime upon one, to accuse one. உன் கவலையைச் சுவாமிக்குச் சாட்டிவிடு, cast your sorrow upon the Lord. அவன் கடனைச் சாட்டிக்கொண்டேன், I have taken his debt upon me. ஒரு சரக்கை ஒருமிக்கச் சாட்டிக்கொள்ளுகிறது, to take a commodity by whole sale. அது அவன் சாட்டாய் இருக்குது, it is committed to him. குற்றச்சாட்டு, an accusation.

சாணான், a jester; a cunning fellow. சாணந்தனம் பண்ணுகிறது, to sport, to jeer, to jest.

சாணுக்கு, *the name of a low plant*.

சாணான் (*fem*. சாணாத்தி) one of the toddy-men's tribe.

சாணி, சாணம், சாணகம், cow-dung. சாணியைக் கரைத்துத் தெளிக்கிறது, to sprinkle the floor with macerated cow-dung. சாணி தட்டுகிறது, to make cow-dung into cakes for fewel.

• சாணை, சாணைக்கல்லு, a whet-stone. கத்தியைச் சாணை பிடிக்கிறது. to whet a knife. நீர்ச்சாணை, a whet-stone to sharpen with water. நெருப்புச்சாணை, a kind of a very hard stone to sharpen or to whet without water.

• சாண், a span. சாணளவாய், சாணீளமாய், a span long. சாண் சாணாய் நறுக்கிறது, to cut off in span-lengths. சாண் வயிறு, the belly which is a span high. எண் சாண் உடம்பு, the human body that is eight spans high.

• சாதகம், a prognostication from constellations. சாதகம் எழுதுகிறது, to prognosticate future events by the constellations. காரிய சாதகம், a prognostication proved true by the event.

சாதம், boiled rice.

சாதனம், சாதனப்பத்திரம், சாதனச்சீட்டு, a bill of sale, a deed of gift etc. சாதனங்கள், deeds, instruments. சிலா சாதனம், a deed or instrument cut in stone. சருகு சாதனங்கள், notes, cadjans.

சாதனை, சாதிப்பு, obstinately affirming or denying; obstinately persisting in a thing.

• சாதாரணம், சாதாருணம், சாதாருணியம், being well accustomed to a thing, doing a thing with ease. சாதாருணியக்காரன், one who is well habituated and quick in business.

சாதி, a sex; a tribe; a nation; a kind; a good kind. ஆண்சாதி, பெண்சாதி, both the sexes, a man and a woman. சாதியார், people of the same tribe or nation. புறச்சாதியார், people of another tribe or nation. சாதிக்குலம், a tribe. சாதிகலப்பு, people of different tribes being mixed together by marriage. சாதிகெட்டவன், one who has made himself unworthy of his tribe. சாதிக்குப் புறம்பாக்கிறது, to turn out of the tribe. சாதித்தலைவன், the chief or head of the tribe. நற்சாதி, உசந்தசாதி, மேன்சாதி, noble. தாழ்ப்புச்சாதி, கீழ்சாதி, of a low extraction. விசாதி, of a different kind. சாதிக்காரன், a European. சாதிக்குதிரை, a fine horse. சாதிச்சரக்கு, good commodities from other countries. சாதிமல்லிகை, Italian jasmin.

சாதிக்காய், a nutmeg. சாதிப்பத்திரி, சாதிப்பத்திரி, சாதிப்பூ, mace.

சாதிக்கிறது, to persist firmly in denying, affirming, acting, suffering etc. சாதித்து வாங்குகிறது, to take *a fort* by perseverance. நிலை நிலையென்று சாதிக்கிறது, ஒரு சாதிப்பாய்ச் சாதிக்கிறது, to deny obstinately. சாதனைக்காரன், சாதனைக்காரன், a gain-sayer. காரியத்தைச் சாதிக்கிறது, to obtain a thing by firmly persevering.

சாதிரியம் *v*. சாதுரியம்.

சாதிலிங்கம், red paint, made of quicksilver and brimstone.

சாது, சாத்திகம், சாத்விகம், tame, mild. சாதுமனுஷன், சாத்திகன், a meek person. சாதுமாடு, a tame ox or cow.

• சாதுரியம், சாதிரியம், eloquence. சாதுரியப்பேச்சு, an eloquent speech. சாதுரியக்காரன், சொல்சாதுரியமுள்ளவன், a famous speaker, an orator.

• சாத்தியம், what promises a good success. சாத்தியவியாதி, a curable disease. சாத்தியகுணமாய்க் காணுது, it seems to be curable.

சாத்திகம், சாத்திகன் *v*. சாது.

சாத்துகிறது, to lay a thing against another. கதவைச் சாத்துகிறது to shut the door *without locking it*. சுவரோடே சாத்துகிறது, (சாத்தி வைக்கிறது) to put *a thing* sloping against the wall. சாத்துப்படி சாத்துகிறது, to dress *an idol*. பூமாலை சாத்திக்கொள்ளுகிறது, to put a garland about the neck. சாத்துக்கவி, a poem borrowed from other poems.

சாந்தம், சாந்தகுணம், meekness, mildness, peaceableness. சாந்தன் (*fem*. சாந்தி) சாந்தகுணன், a meek person. தாநுமப்பண்ணுகிறது, to mitigate. சாந்தகுணம், meekness.

சாந்து, fine mortar to plaster with. சாந்தாய் அரைக்கிறது, to grind lime for fine mortar. சாந்து பூசுகிறது, to plaster with fine mortar.

சாபம், curse, malediction. சாபங்கொடுக்கிறது, சாபமிடுகிறது, to lay a curse upon a person. சாபத்தீடு, the effects of a curse. சாபத்தீடானது, what lies under a curse. சாபநிவர்த்தி, சாபநிவாரணம், சாபமோசனம், the

removing or abolishing of a curse. சாபிக்கிறது, சபிக்கிறது, to curse, to use imprecations *against one*; சாபீடணை, சாபபீடணை, imprecation, cursing.

சாப்பிடுகிறது, to eat; to drink. சாப்பாடழைக்கிறது, சாப்பாட்டுக்குச்சொல்லுகிறது, to invite to a meal. சாப்பாடு, meat. சாப்பாட்டுக்குஅமரிக்கைபண்ணுகிறது, to get a meal prepared. பால்சாப்பிடுகிறது, to drink milk. மருந்துசாப்பிடுகிறது, to take physick.

• சாமகாலம், famine, scarcity of provisions.

• சாமக்கிரி, materials for a building.

சாமணம், pincers of gold-smiths.

சாமத்துரியம் v. சாமுத்திரிகம்.

சாமந்தி, *the name of a garden-flower*. மஞ்சட்சாமந்தி, சிகப்புச்சாமந்தி; வெள்ளைச்சாமந்தி, *the different kinds of ditto*.

சாமம், a space of three hours, four of them reckoned to a day, and four to a night; a night-watch. சாமக்காறன், a watchman. சாமங்காக்கிறது, to keep watch and ward. சாமத்திலேயிருக்கிறவன், a watchman. சாமத்திலேவாறது, to come at an inconvenient time at night. நடுச்சாமம், midnight. மூன்றாஞ்சாமத்திலே, in the afternoon between three and six o'clock; in the morning between three and six o'clock.

சாமாசி, one that speaks for a person, a mediator.

• சாமாத்தியம், சாமாற்றியம், சாமற்தியம், capacity. ஒருத்தனுடைசாமாத்தியத்தைப்பார்க்கிறது, to try one's capacity. தன்சாமாத்தியத்தைக்காட்டுகிறது; to shew one's own capacity. உயித்தத்துக்குச்சாமாத்தியன் (சமற்தன்) a war-like man.

• சாமானியம், bad.

சாமான், goods, things, stuff, tackling, moveables, furniture.

சாமி, சுவாமி, God, the Lord; *the heathens give this name also to their idols, item to their priests*.

சாமித்தியக்கலியாணம், the ceremony made by the heathens when a daughter is grown marriageable. சாமித்தியப்படுகிறது, to grow marriageable.

சாமுத்திரிகலட்சணம், chiromancy, palmistry.

சாமை, *a kind of grain resembling* hirse or millet. சிறுசாமை, பெருஞ்சாமை, *it's different kinds*

சாம்பல், ashes. சாம்பல்நிறம், ash-colour.

சாம்பான், (*fem.* சாம்பச்சி) one of the Parrear-cast.

சாம்பிறாணி, incense. சாம்பிறாணித்தூபங்காட்டுகிறது, to burn (offer) incense.

சாம்பு v. சிலம்பம்.

சாம்பு, a piece containing several cloathes or handkerchiefs: சோமன்சாம்பு, a piece of two cloathes for men. கயிலிச்சாம்பு, a piece of four ditto. லேஞ்சுச்சாம்பு, a piece of handkerchiefs. சிட்டைச்சாம்பு, guingam.

சாம்புகிறது, பம்பாயச்சாம்புகிறது, to pump.

சாயங்காலம், சாயுங்காலம் v. சாய்கிறது, சாயங்காலவிண்ணப்பம், evening-prayer.

சாயம், a die to die cloth with. சாயந்தீர்க்கிறது, to die *cloth, yarn etc*. சாயந்தோய்க்கிறது, to put *the cloth* in the die. சாயம்பிடித்தது, *the cloth* has taken (or imbibed) the die. சாயச்சால், a dying vat. சாயக்காறன்; a dier. சாயவேர், the roots of a plant serving to die fine red with. சாயவேர்ச்சக்களத்தி, a false kind of that plant.

சாயல், likeness, resemblance. பிள்ளை தகப்பன்முகச்சாயலாயிருக்குது, the child resembles the father.

சாய்கிறது, to bend sideward, to decline, to lean on one side, to hang downward. சாய்ந்திருக்கிறது, to be declining or leaning sideward. சாயுங்காலம், சாயங்காலம், the evening or the time towards sun-set. தண்டுஅப்படிச்சாய்ந்துபோச்சுது, the troops turned that way. இதின்மேலேசாயாதே, don't lean hereupon.

சாய்க்கிறது, to incline or bend *a thing*. சாய்த்துக்கொள்ளுகிறது, to bend *a branch etc*. சாய்ந்துகொண்டுநடக்கிறது, to walk stoopingly (in a stooping posture.)

சாய்ப்பு, a slope; eaves. சாய்ப்பாய், slopingly, leaning downwards. சாய்ப்பிறக்கிறது, to make a shed hanging aslope from the main wall. சாய்ப்பாய்ப்போறது, to incline from the road or way; to go away without quarrelling. முகச்சாய்ப்பு, turning the face from one. கண்டு சாய்ப்பாராயிருக்கிறதல், கண்சாய்ப்பு, connivance

சாய்மரை, சாமரை; வெண்சாமரை, a fan of white hair for flies.

சாரசம், good. சாரசமாய்ப்பாடுகிறது, to sing well. சாரசமில்லாதது, without reality, dry, insipid.

சாரணை v. சாறணை.

சாரம், a scaffolding for building. சாரம்போடுகிறது, to erect a scaffolding. சாரம்பிரித்துப்போடுகிறது, to take away the scaffolding. சாரத்துளைகள், holes in a wall for a scaffold.

• சாரம், juice; substance, reality. சாரமில்லாதபேச்சு, a dry and empty discourse void of energy. அசாரம், insipid, unrelishable.

சாரதம், *a kind of song*.

• சாரதி, a charioteer, a coachman. ரதசாரதியம்பண்ணுகிறது, to be a coachman.

சாரல் v சாருகிறது.

சாராசாரியாய்ப்போறது, to go in great company *to a place*.

• சாராயம், brandy, arrack, distilled liquor. அரிசிச்சாராயம், arrack made of rice. கள்ளுச்சாராயம், arrack made of toddy. சாராயக்காறன், a distiller of arrack; one who sells arrack. சாராயம்வடிக்கிறது, to distil arrack. சாராயக்கடை, an arrack-shop.

சாரி, சாரிப்புறப்படுகிறது, the going out, the taking a walk; வலசாரி, turning to the right. இடசாரி, turning to the left (*ex. gr. in the act of dancing etc.*)

சாரித்திரம் v. சரித்திரம்.

சாருகிறது, சார்ந்துகொள்ளுகிறது, to cleave to, to lean, to trust, to rely upon. என்னைச்சார்ந்தவன் (சார்ந்துகொண்டவன்) he who is attached to me, who belongs to me, or trusts me. சுவரோடேசாருகிறது, to lean against the wall. சாரு, சார்வு, a thing which any one cleaves to or leans upon; a refuge, protection. சாருவாயிருக்கிறது, to cleave to, to belong to. உம்முடைசார்விலே வந்தேன், I come to you for refuge, I rely upon your help or protection. மலைச்சார்வு, மலைச்சாரல், the side of a mount, a field on the side of a mount. மனச்சாரல் (சாருதல்) an inclination or propension towards a thing; care, sorrow.

சாரை, சாரைப்பாம்பு, *a kind of snake*.

சார், a bank made acroſs a river with a net fixed in an opening of it to catch fishes.

சாலகம், சாலகவாசல், a kennel.

சாலக்கன், வாய்ச்சாலக்கன், an eloquent man, an orator.

சாலம்பண்ணுகிறது, to make a promise for a shew, without having a mind to fulfil it. சாலக்காறன், a man full of promises but deficient in performances.

சாலம், விசாலம், large, wide. சாலத்துக்கம், great sorrow. சாலத்துக்கவாளி, a man greatly afflicted.

சாலியர், a tribe of weavers. சாலியப்பிடவை, cloth which they weave.

சாலை, an avenue; a hall in a house; a large office-room. சாலைவைக்கிறது, to plant trees for an avenue. சாலைக்காறன், he that plants an alley and takes care of it: பண்டகசாலை, a store-house. சிறைச்சாலை, a prison. தங்கசாலை, a mint. தருமசாலை, a place where alms are given. குதிரைச்சாலை, a stable for horses.

சால்வை, a mantle or cloak of silk. சாலக்குட்டை, a mantle of cotton.

சால், ஏற்றச்சால், the bucket that hangs on the lever over a well to draw water with.

சால், படைச்சால், a furrow. ஒருசால் இருசாலுழுகிறது, to plough a field once, twice etc.

சாவடி, a publick shelter for paſsengers, a choultry.

சாவட்டை, void ears without grain; *the name of a flying inſect*.

சாவதானம், cautiousneſs, circumspection, attention.

சாவல், a cock; the male of birds in general. சாவல்கூவுது, the cock crows. சாவலைப்போருக்குவிடுகிறது, to make cocks fight. சாவல்முள்ளு, a cock's armature or spurs.

சாவி, சாவட்டை, சாவியாய்க்கிடக்கிறபயிர், corn in the field that withers away, ears void of grain.

சாவு, the death. v. சாகிறது.

சாளிகை, a bag of *a certain sum of* money.

சாளியவிரை *a certain medicinal seed*.

சாளேசுரம், சாளாயம், a short or feeble sight. சாளேசுரக்காறன், one who is short or near sighted.

சாளை, a sardel or sardine. நற்சாளை, a good kind of sardels. பேய்ச்சாளை, கருஞ்சாளை, a low black kind of them.

சாறணை, *the name of a plant*. சத்திச்சாறணை, வெள்ளைச்சாறணை, *it's different sorts*.

சாறல், a cold wind.

சாறிப்போகிறது, to slip away.

சாறு, broth; water dropping out of trees; juice of plants. மிளகுச்சாறு, pepper-broth. பனஞ்சாறு, toddy, of palmyra trees.

சாறுகிறது, to sweep the paddy-field for gathering the grains lying on the ground.

சாறுவேளை, *a kind of a cockle-weed*.

* சான்னித்தியம், present; near.

சான்றோர், grave and honest persons.

சிக்குப்பு v. சிவப்பு

சிகரம், the peak or ridge of a hill; the top of a tower; the crown of the head.

சிக்லி. the cleaning of arms. v. சீவுளி, சிக்லிகூட்டுகிறது to clean arms.

சிகை, the tuft of hair on men's heads tied at the top. சிகைச்சதாறு, சிசதாறு, a bodkin for fastening the hair. நகசிகைபரியந்தம், from head to foot.

சிக்கம், a bag made of net-work; netting.

சிக்கல் v. சிக்கு.

சிக்கனவு, tenacity. சிக்கனவுக்காறன், சிக்கனக்காறன், one who is close-fisted. சிக்கென், fast, sharply, tenaciously.

சிக்குகிறது சிக்கிக்கொள்ளுகிறது, to ensnare *one*, to draw *one* in; to become ensnared, entangled. சிக்கினது, சிக்கிப்பட்டது, drawn in, ensnared, intricate.

சிக்கு, சிக்கல், intricacy, perplexity, embroiling. சிக்கெடுக்கிறது, சிக்குவாங்குகிறது, to extricate. சிக்கெடுக்கப்படாதது, inextricable. சிக்கறுக்கிறது, to put a stop to an embroiled affair. சிக்கறுக்கி, சிக்குவாரி, a comb.

* சிங்கம். a lion; leo in the zodiack. சிங்கக்குட்டிகள், the whelps of a lioneſs. வாலசிங்கம், a young lion. கெர்ச்சிக்கிற சிங்கம், a roaring lion. சிங்கப்பல்லு, a snag-tooth. சிங்காசனம், சிம்மாசனம், a throne.

சிங்களம், the Ceylon-language. சிங்களவன் (*fem*. சிங்களத்தி) one of the Cingala-nation in Ceylon.

சிங்காணி, a bow. சிங்காணிக்காறன், an archer.

* சிங்காரிக்கிறது, சிங்காரம்பண்ணுகிறது, to adorn. சிங்காரம், an ornament. சிங்காரக்காறன், one who is fond of dreſs; a beau. சிங்காரவனம், சிங்காரத்தோட்டம், a garden of pleasure.

சிங்கியடிக்கிறது, to clap the sides with the elbows; to joke.

* சிசு, an infant. சிசுவதை, the killing of an infant.

* சிஷ்டன், a pious man. சிஷ்டபரிபாலனம் v. பரிபாலனம்.

சிஷ்டிக்கிறது, to create. சிஷ்டிப்பு, the creation. சிஷ்டிகர், the Creator. சிஷ்டி, a creature, a created being.

* சிட்சை, teaching, correcting.

சிட்டி, a *kind of* jewel for the forehead of women.

சிட்டி, a wooden measure for measuring flowers, fruits etc.

சிட்டு. சிட்டுக்குருவி, *the name of a little bird about the bigneſs of a hedge-sparrow*. மாம்பழச்சிட்டு, *a particular kind of them*. சிட்டுக்குருவிபறக்கிறாப்போலேபறக்கிறது, to run exceedingly swift.

சிணப்போருது v. சேணம்.

சிணுட்டு, the lopping or pruning of trees; அந்தச்சிணுட்டைக்கழித்துப்போடு, lop that branch; make an end of the difference, make the matter up.

சிணுட்டுகிறது, to lay hold on a thing, to keep it fast. போனவியாதிஅவனைச்சிணுப்பிடித்துக்கொண்டேயிருக்குது, his former sickneſs has again seized him. சிணுப்பிடிப்பார்க்கிறது, சிணுப்பிடிக்கக்கொண்டிருக்கிறது, to seek an occasion for quarrelling.

சிணுக்கிறது, சிணுக்கிக்கொள்ளுகிறது, to touch slightly, to nettle, to nip. சிணுக்கிவைக்கிறது, to give a hint. சிணுக்கிவிடுகிறது, சிணுக்கப்பார்க்கிறது to excite a quarrel

சிணுக்கு, intricacy. சிணுக்குவாங்கி, சிணுக்

கறுக்கு, a comb. சிக்குக்கறுக்கிறது, to comb out entangled hair; to extricate.

சிணுடு, the tuft of the hair on the top of the head.

சிணுடுசெவ்வந்தி v. செவ்வந்தி.

சிதம்பு v. சிலம்பு.

சிதள், a scale of a fish; a little bit of wood, bone etc.

சிதளம் v. சதளம்.

சிதறுகிறது, சிதறிப்போகிறது, to be scattered; to ramble about, to go astray. சிதறுகிறது, சிதறிப்போடுகிறது, சிதறடிக்கிறது, to disperse, to scatter, to dissipate.

சிதாப்பூச்சி, சிராப்பூச்சி, *the name of an insect.*

சிதைகிறது, சிதைந்துபோகிறது, to be destroyed, to perish. சிதைவு, destruction.

சிதைக்கிறது, சிதைத்துப்போடுகிறது, to ruin, to destroy.

சித்தப்பன் v. அப்பன்.

சித்துருப்பூடு, *the name of a medicinal plant.*

• சித்தம், the will. சித்தமிராங்காதவன், one who is hard to be persuaded. உம்முடைசித்தம், உம்முடைசித்தத்துக்குச்சரிப்போனப்போலே, as you please; according to your pleasure; conformably to your wishes. அவன்சித்தந்திரும்பிற்று, his mind is changed.

சித்தன் v. சன்னியாசி.

சித்தாடை v. ஆடை.

• சித்தாத்தாள் v. ஆத்தாள்.

சித்தாந்தம், an astronomical system used more in the northern parts. வாக்கியம், another used more in the southern parts.

சித்தி, காரியசித்தி, success.

சித்தி, a small vessel with a narrow orifice *for butter, oil etc.*

சித்திக்கிறது, to happen. பொல்லாப்புனக்குச்சித்திக்கும், an evil will happen to you. காரியஞ்சித்தித்தது, the thing has had success.

• சித்திரகம், *the name of a shrub.*

• சித்திரம், a figure; neatness. சித்திரவேலை, carved work. சித்திரமெழுதுகிறது, to draw a picture. சித்திரக்காரன், a carver; a limner. சித்திரத்தையல், embroidery. சித்திரம்பேசுகிறது, to speak affectedly. சித்திரக்குள்ளன், a dwarf.

சித்திரமூலம், *a certain medicinal root.*

• சித்திரை, April, the first month of the Indians. சித்திரைக்கார், *a kind of* paddy ripe in April.

சித்தினம் v. தினம்.

சித்து, legerdemain, slight of hand. சித்துவிளையாடுகிறது, to juggle, to play juggler's tricks.

சித்தன், a juggler.

சித்துரி v. உரி.

சித்தார் v. சிறு.

சிந்தனை v. சிந்தனை.

சிந்தாக்கு, *the name of a trinket.*

சிந்தாத்திரை, prosperity. சிந்தாத்திரையாய்ப்போகிறது, to go a lucky voyage. சிந்தாத்திரையாய் (சிந்தாத்திரையே) வருகிறது, to return safely from a voyage.

சிந்தாமணிமாத்திரை, a pill with the ingredients of gems. சிந்தாமணியிலேகொடுக்கிறது, to give physick in such pills.

சிந்திக்கிறது, to think, to reflect. சிந்தித்துப்பார்க்கிறது, to consider. சிந்தனை, சிந்தனை, a thought; sorrow, care. சிந்தனைப்படுகிறது, சிந்தனையாயிருக்கிறது, to be concerned.

சிந்து, *a kind of a poem.*

சிந்துகிறது, சிந்திப்போடுகிறது, to spill, to shed. சிந்தாதேகொண்டுபோ, take care lest you spill it. சிந்தாமற்றங்காதேகொண்டுகிறது, to take a thing up without spilling or spoiling. சிந்திப்போகிறது, சிந்துகிறது, to be spilled.

• சிந்துதேசம், India. சிந்துநதி, the river Indus.

• சிந்தூரம், vermillion, a medicinal composition made of metals. சிந்தூரப்பொட்டு, a spot of vermillion. ரசசிந்தூரம், a red powder made of mercury. வெள்ளைச்சிந்தூரம், white lead.

சிப்பம், a packet. சிப்பமாயவைக்கிறது, to put things into a packet.

சிப்பம், சிப்பாசாஸ்த்திரம் v. சிற்பம்.

சிப்பி, little shells. சிப்பிமுத்து, mother of pearl; false pearls. சிப்புச்சிப்பி, a kind of a comb.

சிப்பியன், a taylor.

சிமக்கிறது v. சுமக்கிறது.

சிமாளம், mirth, play, gaiety. சிமாளிக்கிறது, சிமாளமாய்க்கிறது, to leap for joy.

சிமிட்டு, the twinkling of the eyes. சிமிட்டுக்கண், twinkling eyes. சிமிட்டுக்கண்ணன், one that twinkles with the eyes. கண்களைச்சிமிட்டுகிறது, to twinkle with the eyes. சிமிட்டுப்பார்வை, eyes always twinkling.

சிமிண்டுகிறது, to touch with the finger. சிமிண்டிக்காட்டுகிறது, to shew by pointing with the finger. சிமிண்டிப்பிடுங்கிறது, to nip, to pinch or slash.

சிமிழ், சிமிள், a little box. மரச்சிமிழ், a wooden-box. கொம்புச்சிமிழ், a horn-box. வெள்ளிச்சிமிழ், a silver-box. மூக்குத்தூட்சிமிள், a snuff-box.

சிம்பா, the wad of a gun.

சிம்பு, a piece of wood, a stick.

சிம்புகிறது, to steal away. காலாலேசிம்புகிறது, to snap a thing away with the toes.

சிரங்கு, the itch, scab, scabbiness or scurf of the body; the mange. சிரங்குபிடித்தது, I have got the itch. சிரங்குசொறியுமாயிருக்கிறது, to be full of scab, to be scabby. சிரங்குஆறிப்போச்சுது, the itch or mange is healed.

• சிரசு, சிரம், the head. சிரசுவெட்டி, an ax for beheading, a chopping ax. சிரக்கம்பம், a nod. சிரக்கம்பமாயப்போய்விட்டான், he went his way nodding at it. சிரசுவரம்பண்ணிக்கொள்ளுகிறது, to get the head shaved. சிரசேதம்பண்ணுகிறது, to behead. சிரோமணி, a gem worn on the head of great persons; an eminent person.

சிரஞ்சீவி, a long-lived person.

சிரம்பம் v. சிலம்பம்.

• சிரவணம், the ear; the hearing.

சிராய், சிராய்ப்பொட்டு, a splinter, a little splint of wood, a fescue; carpenter's-chips. சிராய்ப்பொட்டுவிரலிலேதைத்தது, I have run a splinter into my finger. சிராய்அருத்து, the splinter pains me.

சிரிக்கிறது, to smile, to simper, to smerk, to laugh. சிரிப்பு, laughing, smiling. சிரிப்பாணி, one who is ridiculous or worthy to be laughed at; jest, laughter. சிரிப்பாணிக்கிடமாயிருக்கிறது, to be fit to be laughed at, or ridiculed.

• சிரேசு, riches, prosperity.

• சிரேஷ்டம், good, eximious, excellent. சிரேஷ்டன், a celebrious person.

சிரைக்கிறது, to shave. சிரைத்துக்கொள்ளுகிறது, to get one's self shaved. சிரையன், a

Barber. சிரைத்துப்போடுகிறது, to shave close, to cut off cleverly.

(சிலகு), இன்னமொருசிலக்காய், once more.

சிலந்தி, சிலந்திப்பூச்சி, a spider.

சிலந்தி, an ulcer; venereal biles. சிலந்திபிடித்தவன், one who has such biles. முலைச்சிலந்தி, an ulcer in women's breasts.

சிலம்பம், fencing. சிலம்பம்பண்ணுகிறது (ஆடுகிறது) to fence. சிலம்பக்கூடம், a fencing school. சிலம்பம்பழகுகிறது, to learn to fence. சிலம்பம்பழக்குவிக்கிறது, to instruct one in fencing. சிலம்பக்காறன், a fencing-master, a fencer.

சிலம்பல், சித்திரைச்சிலம்பல், the beginning of the inundation of the fields from the western country, in April.

சிலம்பு, a trinket with a little bell in it.

சிலர், சிலபேர், சிலமனுஷர், some people. சிலவிசை, சிலகால், some times. சிலது, some part. சிலதுகள், some things.

சிலவு, expenses, charges; leave. சிலவாய்ப்போகுது. சிலவழிக்கிறது, to be spent. எச்சிலவுந்தள்ளி, clear of all expenses. எனக்குச்சிலவுக்கில்லை, I have nothing for my expenses. வழிச்சிலவு, journey-expenses. வீட்டுச்சிலவு, house-expenses. சிலவழிக்கிறது, to spend, to make expenses. சிலவுபண்ணுகிறது, to spend; to have the charge of the money to be expended for a thing. சிலவைக்குறுக்குகிறது, to curtail the expenses. பிராணனைச்சிலவழிக்கிறது, to lay down life. குதிரையைச்சிலவழிக்கிறது, to sell a horse. சிலவிடுகிறது, to regulate the expenses. நான்போகிறதுக்குச்சிலவுகொடுக்கிறீரோ, do you give me leave to go? சிலவுவாங்குகிறது, to take leave.

சிலாகை, a ramrod.

* சிலாக்கியம், good, excellent. சிலாக்கியம்பண்ணுகிறது, to live splendidly. சிலாக்கியக்காறன், சிலாக்கியன், one who lives splendidly.

* சிலாம்பு, a splinter.

சிலாறு, trouble, jarring. உங்கள் வீட்டிலே சிலாறாயிருக்குது, there is a quarrel in your house. சிலாறுபண்ணுகிறது, to make disturbance.

சிலிந்தியரிசி, little bulbs of the root of a plant called கோரை, eaten by poeple in time of famine.

சிலிர்க்கிறது, சிலிரென்கிறது, to be benumbed by terror.

சிறுக்கு, hindrance. சிறுக்குடுகிறது, சிறுக்குப்பண்ணுகிறது, to hinder, to stop.

சிறுக்கிறது, சிறுத்துப்போகிறது, to be overboiled; to be overdone, to be worked too hard. உடம்பெல்லாஞ்சிறுத்துக்கொண்டுவேர்த்தது, the body is in a violent perspiration. சாதஞ்சிறுத்துப்போச்சுது, the rice is boiled too much. சிறுக்கடிக்கிறது, to boil too much; to damage *fine linnen* in washing it.

சிறுக்கு, trouble, impediment, tediousness; quarrel. சிறுக்காய்க்கிடக்கிறது, to be stopped, to have no success. சிறுக்காயிருக்கிறவழி, a road frequented by robbers. சிறுக்கன், one who is overburdened with business.

சிறுசிறுப்பு, disliking. சிறுசிறுவென்றுநோகிறது, to smart.

சிறுப்புக்கிறது, to bristle, to make the hair stand erect as bristles; to collect the particles of butter after churning. மயிரைச்சிறுப்பிக்கொண்டுதிரிகிறது, to be dishevelled. மயிரைச்சிறுப்பிவிடுகிறது, to let the hair remain uncombed.

சிறும்பிப்போகிறது, to stick out, to be prominent.

சிறும்பல், ends of yarn sticking out in woven cloth etc. uneven, disorderly. சிறும்பலில்லாமலெழுக்கிறது, to wind up the thread even.

சிறுவை, சிறுவைமரம், a cross. சிறுவையிலேயறைகிறது (கடாவுகிறது) to crucify.

* சிலேட்டுமம்; phlegm, a phlegmatick temper. சிலேட்டுமநாடி, a low pulse. நாடிசிலேட்டுமத்தைத்தப்பறியிருக்குது (சிலேட்டுமத்திலேவிழுந்தது) the pulse is very low, the patient is oppressed with phlegm. சிலேட்டுமம்நடக்குது, it rattles in his throat, he is a-dying.

* சிலை, a stone; a statue. பொற்சிலை, a statue of gold.

சிலைஷுடுக்கிறபுண், a fistula, a deep sore or ulcer.

சில்லறை, little, few, trifling. சில்லறைக்கடை, a shop wherein many little things are sold. சில்லறைக்காரியங்கள், trifles. சில்லறைப்புத்தி, a shallow wit. சில்லறையிலேவிற்கிறது, to retail.

சில்லி, a little hole in an earthen vessel. சில்லிக்குடம், a pot with little holes. பானையைச்சில்லியாக்கிறது, to make holes in a pot.

சில்லு, little pieces of potsherds the children play with. முழங்காற்சில்லு, the whirlbone of the knee.

சில்வானம், odd. நானூற்றுச்சில்வானம், four hundred and odd. இருபதுசில்வானம் வருஷங்கள், twenty odd years, twenty years and upwards.

சிவக்கிறது, to grow red. சிவந்திருக்கிறது, to be red. சிவந்தகண், blood-shot eyes. சிவப்பு, சிகப்பு, red, ruddy. சிவப்பன் (*fem*. சிவப்பி) சிவலை, Indians of a whitish colour. கீழ்க்கேசிவந்தது, the dawn of the day appears. சிவத்தது, red by nature. சிவந்தது, what is become red.

சிவதை, *a certain purgative root*.

சிவர் v. சுவர்.

சிவிங்கி, சிவேங்கி, சிவிங்கிநாய், a kind of Leopard, *used by the Moors in hunting*.

சிவியார், a tribe of palankeen-boys.

சிவேரென்றிருக்கிறது, to be very red.

சிள்ளீடு. சிள்ளூறுவண்டு, *a flying insect*.

சிளுப்புளென்றுகாயுது, *the water* seethes or boils up. சிளுப்புளென்றுபேசுகிறது, to prate, to prattle, to chatter.

சிறகி, a fen-duck, a small kind of teals. சிறகிமீன், a flying fish.

சிறகு, bird-wings, feathers; fish-fins; wings or streets of houses to the east, west etc. சிறகுமுளைக்குது, the feathers of the wings grow. சிறகையசைக்கிறது, to flutter the wings. சிறகைவிரிக்கிறது, to spread the wings. சிறகையடித்துப்பறந்துபோகிறது, to clap the wings and fly away.

சிறக்கிறது, to be performed with festivity and pomp; to perform with pomp. வெகுசிறக்க

து, to triumph. சிறப்பு, ornaments, magnificence. சிறப்பிக்கிறது, to adorn; to celebrate with pomp. சிறப்பிடுக்கிறது, to adorn.

சிறாங்கை, as much as the palm or hollow of the hand can contain.

சிறாங்கணிக்கிறது, சிறாங்கணித்துப்போடுகிறது, சிறாங்கிக்கிறது, to despise. சிறாங்கணித்துப்பேசுகிறது, to speak contemptuously. சிறாங்கணித்துப்போகிறது, to grow contemptible or abject.

சிறாங்கு v. சறாங்கு.

சிறுக்கி, a girl; a maid-servant; a slave-girl.

சிறிசு, சிறிது, சிறியது, little, small. சிறியதகப்பன், the father's younger brother. சிறியதாய், the mother's younger sister. சிறியவன், a young person; a junior; one of the inferior sort of people. (Plur. சிறியோர், சிறியோர், சிறியர்) சிறியோர்பேச்சைக்கேழ்க்கிறது, to follow the advice of mean people.

சிறுக்கிறது, சிறுத்துப்போகிறது, to decrease, to shrink, to grow small. சிறுக, sparingly. சிறுகச்சிறுக, every now and then a little. சிறுகக்கொள்ளு, சிறுக்கொள்ளு, drink a little. சிறுகசப்பு, somewhat bitter. சிறுகிழங்கு, *the name of a kind of* Indian turnips. சிறுகீரை v. கீரை. சிறுசெண்பகம், *the name of a flower-shrub*. சிறுதானியம், several sorts of small grain or pulse. சிறுபதி, சிறுகுடி, a little village, a low place. சிறுதேன், honey of an inferior sort of bees. சிறுநீர், urine. சிறுபிள்ளை, a little child. சிறுகுட்டி, a smith's hand-hammer. சிறுவயது, childhood.

சிறுக்கிறது, to make decrease.

சிறுது, some, several. சிறுதுபேர், some persons. சிறுதுகாலம், some space of time.

சிறுமை, poverty, misery. சிறுமைப்படுகிறது, to suffer misery.

சிறுவம், சிறுப்பம், infancy, childhood.

சிறை, a captive, a slave; captivity. ஒருத்தரைச் சிறைகொண்டுபோகிறது (சிறைப்பிடித்துக்கொண்டுபோகிறது) to carry one away into captivity. சிறையிருப்பு, captivity, bondag... சிறைச்சாலை, the prison; town-jail. சிறைவைக்கிறது, to keep slaves. சிறைபோனவர்கள், people led away into captivity. சிறைநீங்குதல், the release of captives. சிறைகாரன், a plagiary, kidnapper. சிறைப்படுகிறது, to be taken captive; to be imprisoned.

சிற்பம், சிப்பம், சிப்பசாஸ்திரம், architecture; art of stone-cutting and of any mechanical fine work. சிற்பர், சிப்பியர், சிப்பாசாரியர், stone-cutters, architects.

சிற்றப்பன், the father's younger brother.

சிற்றாடை, a cloth for a young girl.

சிற்றாமணக்கு v. ஆமணக்கு.

சிற்றுப்பேடி, *a kind of coloquinteda*.

சிற்றுவெட்டம், a small umbrella.

சிற்றில், a small house.

சிற்றின்பம், sensuality, fornication.

சிற்றுளி v. உளி.

சிற்றூர், a small town.

சிற்றெறும்பு v. எறும்பு.

சினக்கிறது, சினந்துகொண்டுருகிறது, to be angry, wrathful. சினத்தவன், one who is of an angry temper. சினந்தவன், one who grows angry. சினப்பு, anger, wrath.

சினம், anger.

+ சினேகம், love, friendship. சினேகம்பண்ணுகிறது (பண்ணிக்கொள்ளுகிறது) to make friendship.

சினேகிக்கிறது, to love.

சினேகிதம், friendship.

சினேகிதன் (*fem*. சினேகிதி) a friend.

+ சிவர v. சேவர்.

சின்ன, சின்னது, small, little. சின்னவன் (*fem*. சின்னவள்) a person of young age; of an inferior rank. சின்னமனுஷன், a man of a mean character. சின்னத்தனம், dishonor. சின்னத்தனம்பண்ணுகிறது, to dishonor. சின்னபின்னமாய்வெட்டுகிறது, to cut into small pieces.

சின்னம், a kind of trumpet; the red streak which some heathen-tribes put on their fore-head between two white ones.

சின்னாயி, the mother's younger sister.

சின்னிசக்கிழங்கு, water-germander.

சின்னிமூலம், காட்டுச்சின்னி, *certain shrubs*.

சீ, சீழ், putrid matter, matter in a wound. சீகொள்ளுகிறது, to fester, to suppurate etc. சீபிதுக்கிறது, to squeeze the matter out.

சீ (chee) fy! சீயென்னப்பட்டது, abominable. சீபோ, fy! go your way.

சீக்கவழைக்கிறது, to call by whistling. சீக்காயவிடுகிறது to whistle.

சீக்கிறது. மண்ணைச்சீக்கிறது, to scratch the ground as birds.

+ சீக்கிரம், சீக்கிரம் சீக்கிரமாய், சீக்கிரத்திலே, சீக்கிரத்துக்கு, hastily, in haste, quickly, speedily.

சீக்கியான், சீக்கிரான் a thorn-bush whose leaves, when bruised, serve for rubbing off the oil after bathing.

+ சீஷன் (*fem*. சீஷி) a disciple சீஷர், சீஷாக்கள், disciples.

சீடையாய்ப்போகிறகுழந்தை, a child that does not grow.

சீட்டி chints, painted calicos. சீட்டிக்கரையெழுதுகிறது, to paint chints.

சீட்டிநக்கதிர், gleanings left for the servants or the poor.

சீட்டு, a note, bill, bond; a chit or small letter. மனைச்சீட்டு, a ground-bill. வீட்டுச்சீட்டு, a house-bill. சாவடிச்சீட்டு, a choultry-bill, a bill confirmed by the Justices. கள்ளச்சீட்டு, a forged bill. சாவாதுசீட்டு, வதிட்சீட்டு, the copy of a bill. கைச்சீட்டு, a note of hand. மேல்சீட்டு, a bill annexed to the principal one to authenticate it. சேரமுறுக்குச்சீட்டு, a receipt.

சீட்டை, சீட்டு, சீத்தை v. சீட்டி.

சீண்டரம், சீண்டிறம், wickedness. சீண்டரம்பிடிக்கிறது, to act wickedly.

சீண்டுகிறது, to wink, to beckon; to give secretly a sign with the finger.

சீதம், slimy and pituitous stuff discharged with the excrements; coldness. சீதசீதமாய்ச்சழிக்கிறது, to have a slimy or clammy flux. இரத்தமுஞ்சீதமுமாய்க்கழிக்கிறது, to have stools of blood and viscous matter. சீதசுரம், an ague.

+ சீதளம், coldness, frigidity. சீதளகாலம், the cold season. சீதளங்கொண்டிருக்கிறது, to have caught a cold.

+ சீதனம், சீதனவுடைமை, a dower or dowry, marriage-goods. சீதனங்கொடுக்கிறது, to give a dowry.

சீதாரி, சீதாரிக்கட்டை, *a certain weed*. சீ

தா

நாரிபோட்டுப்புகைக்கிறது, to fumigate with the above wood.

சீத்தியாய்ப்போகிறது, to come off a looser. அவனிலுநான்சீத்தியோ, am I less than he?

சீத்தோஷ்ணம் v. உஷ்ணம்.

சீத்துப்பூத்தென்றிரைக்கிறது, to breathe by quick & audible reciprocations when the body is agitated.

சீத்துவம் v. திறம்.

சீந்தல், a drizzling rain.

சீந்தில், *the name of a plant.*

சீந்துகிறது, to snuff at one like an angry cat. மூக்குச்சீந்துகிறது, to blow the nose.

சீப்பு, a comb; a part of a bunch of plantains, having the form of a comb. சீப்பிடுகிறது, to comb. சீப்பாலேவாருகிறது (சீவுகிறது) to comb off. எருசீப்புக்காய், so many unripe plantains as hang together in one cluster. சீப்புச்சாட்டை, *the name of a fish, whose fins on the back have the form of a comb.*

+ சீமான், a rich or opulent man, a person of high consideration. சீமாட்டி, a matron. சீமானாயிரு, I wish you wealth (or happiness;) fare well!

+ சீமை, சீர்மை, a country. சீமையாளுகிறது, to reign. சீமைப்பற்று, the jurisdiction; territory.

சீம்பால். சீழ்ப்பால், the first milk of a woman after being delivered of a child; or of a cow after calving.

சீயக்காய், the cods or outmost integuments *of a certain shrub*, which, when dried and boiled, serve for rubbing off the oil from the head.

சீயான், சீயன், சீயார், a grandfather (*a word used in jest.*) சீயானென்றழைக்கிறது, to call one *in jest* a grandfather. சீயாரைக்கூப்பிடுகிறது, to call for the help of the grandfathers. சீயாரோடேசொல்லுகிறது, to tell a thing to the grandfathers; to complain in vain.

+ சீரகம், cumin; cumin-seed. நற்சீரகம், usual cumin. கருஞ்சீரகம், black cumin. காட்டுச்சீரகம், wild cumin. பெருஞ்சீரகம், anise; anise-seed. சீரகச்சம்பா. *a kind of paddy.*

+ சீரணம், digestion. சீரணமாகிறது, சீரணிக்கிறது, to concoct, to digest, to be digestible. சீரணத்துக்குவாராமற்போகிறது, to be indigestible. சீரணித்துப்போகிறது, to digest; to grow poor.

சீரணி, comeliness.

சீரூணா, an accustomary habit.

சீரா, a coat of armour, a harness for the breast. சீராவைப்போடுகிறது, to put on a harness. சீராப்பொடி, a leather-bucket.

சீராட்டுகிறது, சீராட்டிப்பார்க்கிறது, சீராட்டுப்பண்ணுகிறது, to educate or maintain with great care. சீராட்டுக்காரன் (*fem.* சீராட்டுக்காரி) a person that takes care for one's education. சீராட்டில்லாதவன், one of whom no body takes care.

சீர், a state, condition; a good state or condition. சீராய், well, decently, properly. சீரற, disorderly, unmannerly. சீராயிருக்கிறது, to be decent, modest; to be in a good way. சீராகாதேபோகிறது, to have no success. சீரிடுகிறது, to regulate properly. சீருக்குவருகிறது, to return to order; to reform the life; to grow better. சீரகெட்டது, சீர்கேடானது, ugly, corrupted. சீர்கோடாலாச்சல், disorder; immodesty, சீர்பிழை, a fault. நற்சீர், a good state. துற்சீர், an ill state.

சீலம், abstinence from eating flesh and drinking strong liquor. சீலமாயிருக்கிறவன், சீலக்காரன், one who abstains from flesh and strong liquor.

சீலாப்பொடி v. சீராப்பொடி.

சீலிக்கிறது, to accustom one's self. சீலிப்பு, custom, use.

சீலை, a cloth. தலைச்சீலை, a cloth wherewith some men tie their head and hair. குளிச்சீலை, a fore-flap covering the privy parts.

சீவம், life. சீவோபாயம், industry for getting the necessaries of life. சீவாத்துமம், a living soul. சீவுற்பத்தி, சீவோற்பத்தி, the first beginning of life.

சீவல், lean. சீவலாயிருக்கிறநெல்லு, paddy not come to perfection.

சீவனம், life; the way of living. சீவனம்பண்ணுகிறது, to live.

X சீவன், life; a living creature. சீவனுள்ள, living. சீவனோடிருக்க, alive. சீவன்கள், சீவசெந்துக்கள், சீவப்பிராணிகள், living creatures. நரசீவன், மனுஷசீவன், one of the human species. மிருகசீவன், an animal. பரமசீவன், சருவசீவகர்த்தர், God. சீவனைக்கொல்லுகிறது, to kill a creature. சீவநாயகன், God the author of life. சீவனுண்டாய்ப்பேசுகிறது, to speak loud. சீவனற்ற, lifeless.

சீவிக்கிறது, சீவித்துப்போகிறது, to die, to depart this life.

சீவியர், the living, the quick.

சீவுகிறது, to shave, to scrape, to furbish, to sharpen a stick with a knife. சீவிப்போடுகிறது, to scrape off. மயிரைச்சீவிமுடிக்கிறது, to comb and tie the hair.

சீவுளி, a burnishing stick; a polishing iron. சீவுளியாடுகிறது, to furbish, to burnish, to polish. சீவுளிக்காரன், a polisher.

சீழ், putrid matter, matter in a wound or ulcer.

சீறுகிறது; to snuff at one, to fret and foam; to hiss as serpents. சீறு, சீறுதல், சீற்றம், huffing out of anger; hissing. சீறுபாறுபண்ணுகிறது, to brawl at one; to treat one roughly.

சீனம், மகாசீனம், China. சீனன், a China-man. சீனப்பூ, *the name of a flower.*

சீனி, powder-sugar. சீனிக்கிழங்கு, sweet potatoes. சீனிமிளகு, a *kind of pepper good in physick.*

+ சீனி, a wooden anchor. சீனிக்கயிறு, the cable of a wooden anchor.

சீனி, a saddle.

சுகண்டம், *a kind of* an amethyst.

+ சுகந்தம், சுகெந்தம், a sweet scent; perfumes. சுகந்தங்கள், perfumes.

+ சுகந்திரம், சுகந்தரம், சுவந்தரம், an inheritance; hereditary rent or privilege. சுகந்திரவாளி, சுகந்திரன், சுகந்திரக்காரன், சுகந்திரத்துக்குடையவன், சுவந்திரவாளி, an heir, one to whom any thing is due by right of heritage; the proper owner. எனக்குச்சேலுஞ்சுகந்திரம், what is due to me by right of heritage. சுகந்திரத்தைப்பிடிக்கிறது, to enter upon an heritage. சுகந்திரத்திட்டம், the revenue or privilege belonging to one.

சுகம், health; safety. சரீரசுகம், health. சுகமாயிரும், fare well! I wish you health! சுகமேயிருக்கிறது, to be well. சுகப்படுகிறது, to be restored to health; to prosper. சுகமாய.

சுகரேட்சிதமாய், safely. சுகசரீரம், an healthy body. சுகசரீரி, an healthy man or woman; a delicate person. சுகக்காறன், சுகவான், சுகி, சுகப்பட்டவன், சுகசீவி, an healthy & wealthy man. சுகசன்னி v. சன்னி. சுகதுக்கங்கள், indisposition, sickness; adversity. சுகட்சியகாலம், a time of plenty, when victuals are cheap. சுகசெல்வி, a voluptuous woman.

சுகிக்கிறது, சுகித்துக்கொண்டிருக்கிறது, to be well, to be well off; to live in prosperity. சுகியன், சுகியுண்டாயிருக்கிறவன், one who is remarkably well (or prosperous.) சுகிக்கஅறியாதவன், one that slights (or neglects) his own welfare.

சுகிர்தம், சுகிர்தம், piety, virtue; reward for virtue, bliss. சுகிர்தமடைகிறது, to obtain bliss. சுகிர்தபுண்ணியங்கள், merits, meritorious works. சுகிர்தக்காறன், a virtuous person; a blessed man.

• சுகுணம், a good nature or quality.

சுக்கடுத்தம் v. கடுத்தம்.

சுக்கல், a small bit; a thing grown dry.

சுக்கான், the rudder or helm of a ship. சுக்கான்பிடிக்கிறது (திருப்புகிறது) to steer the ship. சுக்கானிகர், சுக்கான்பிடியிலேயிருக்கிறவன், the pilot or steersman.

சுக்கான்கல்லு, lime-stone. பச்சைச்சுக்கான், lime-stone not yet burnt. சுக்கானீறு, lime of the above stones.

• சுக்கியானம், holy law, theology, ecclesiastical statutes.

• சுக்கிலம், man's seed; a white or pale color; light. சுக்கிலப்பிரமியம், சுக்கிலமேகம், the gonorrhea, a noisome matter flowing from the reins. சுக்கிலபட்சம், the time from the new-moon to the full-moon.

• சுக்கிறன், சுக்கிரன், Venus, the planet. சுக்கிரவாரம், friday.

சுக்கு, dry ginger.

சுக்கு, சுக்கல், a small pieces, a bit or particle. சுக்குச்சுக்காய் (சுக்கலாய்) உடைந்துபோகிறது, to break in small pieces. சுக்குச்சேட்டுப்பண்ணுகிறது, to draw some profit even from trivial things. சுக்குச்செட்டுக்காறன், one that is extremely covetous.

சுங்கம், toll, tollage, custom or tax paid for merchandises exported or imported. சுங்கமெடுக்கிறது, to gather the tollage. சுங்கமுங்கூழுமொருக்கத்தடிக்கும், tollage and porridge thicken by too long a tarriance.

சுங்கான், a tobacco-pipe.

சுங்கு, a plait or fold of an Indian garment. சுங்குபிடிக்கிறது (வைத்துக்கட்டுகிறது) to fold up a cloth; to lay it in gears.

• சுசி, சுசிகரம், cleanness; delicacy.

சுடர், light, sparkles glimmering among the embers; sparkles hammered out of an hot iron; the flame of a candle. இருசுடர், the two lights, sun and moon. சுடருகிறது, to shine, to glimmer.

சுடலை, சுடலைக்கரை, a place for burning the dead.

சுடுகாடு, *ditto*.

சுடுகிறது, to burn, to be burning-hot; to burn, to toast, or roast or bake a thing; to fire a gun or cannon. சுட்டுப்போடுகிறது, to consume a thing by fire; to shoot *a bird, etc*. சுட்டெரிக்கிறது, to burn down *a town, forest etc*. சுடச்சுடத்தின்கிறது, to eat *your meat* hot. சுடுதண்ணீர், boiling-hot water.

சுட்டி, a woman's trinket hanging down upon the forehead.

சுட்டுகிறது, to demonstrate, to point at. பிள்ளைகளைச்சுட்டி, with regard to the children. சுட்டுச்சொல், a demonstrative pronoun.

சுணக்கம், சுணங்கன், a dog. சுணக்கப்புத்தி, a doggish temper. சுணங்கத்தனம்பண்ணுகிறது, to be apt to bite. சுணங்கத்தனக்காறன், one who is apt to bite as a dog. சுணங்கன்முத்திரை, a mark branded with a dog's shape.

சுணங்கல், meager, lean. சுணங்கிவிழுகிறது, to grow weak.

சுணை, rough as some leaves or fruits are; an itching caused by the dust of paddy etc. சுணையில்லாதவன். சுணைகெட்டவன், an insensible person, one that is past shame. சுணையுள்ளவன், one who is sensible of his reputation.

சுணைக்கிறது, to proportion, to frame or square a thing by a pair of compasses. சுணைந்திருக்கிறது, to be proportioned.

சுண்டில், the sensitive plant, a plant whose leaves shrink when touched.

சுண்டு, the dirt of the head.

(சுண்டு, small) சுண்டுவில்லு, a bow for little earthen balls. சுண்டுவில்லாலேபோடுகிறது, to shoot little earthen balls. சுண்டெலி v. எலி. சுண்டுவிரல் v. விரல்.

சுண்டுகிறது, சுண்டிப்போகிறது, to be boiled so much that very little liquor remains. சுண்டக்காய்ச்சுகிறது (எரிக்கிறது) to boil the most part of the liquor away. சுண்டினதண்ணீர், water whereof a great part is boiled away. சுண்டிப்போடுகிறது, சுண்டலாக்கச்சமைக்கிறது, to stew.

சுண்டுகிறது, to scrape up *dry leaves, slips, chips etc.*

சுண்டை, *a shrub, of whose fruits pickle is made*.

சுண்ணாம்பு, lime, chunam. சுண்ணாம்புக்காளவாய், a lime-kiln. குழைசுண்ணாம்பு, slaked lime. சுண்ணாம்புகுழைக்கிறது, to slake lime. சுண்ணாம்புபூசுகிறது (தடவுகிறது) to parget or plaster a wall with chunam. சுண்ணாம்படிக்கிறது, to white-wash. சுண்ணாம்பையிடிக்கிறது, to beat the lime fine. சுண்ணாம்பைப்பமிசக்கிறது, to mash or mix mortar. சுக்கான்சுண்ணாம்பு, stone-lime. சங்குச்சுண்ணாம்பு, lime of large shells. கிளிஞ்சிச்சுண்ணாம்பு, சிப்பிச்சுண்ணாம்பு, lime of small shells. நத்தைச்சுண்ணாம்பு, slight lime of snail-shells. முத்துச்சுண்ணாம்பு, the best kind of lime.

சுதந்தரம், சுதந்தரியம், a right to a thing v. சுதந்திரம்.

• சுதன்மம், a statute, custom, law; good works, charity.

• சுதன், a son.

சுதும்பு, a milk-fish.

• சுத்தம், clean, pure. சுத்தம்பண்ணுகிறது, to clear, to cleanse, to purify. சுத்தமாகிறது, சுத்தப்படுகிறது, to grow clean. சுத்தத்தப்பறை, a downright lie. சுத்தப்பாழாய்ப்போகிறது, to become totally ruined. சுத்தமாய்ப்போச்சுது, it is entirely gone. சுத்தசத்தியம், the naked truth. சுத்தன், one who is clean. சுத்தவாளனாகிறது, to be declared innocent. சுத்தாங்கம், cleanness, neatness.

• சுத்தி, clean. சுத்திபண்ணுகிறது, to cleanse. மலசுத்தி, a stool, evacuation of excrements.

சுத்தி, சுத்தியல், an hammer.

சுத்தீக

சுத்திகரிக்கிறது, to cleanse, to purify. சுத்திகரம், purification.

சுற்றுகிறது, to go about, to incompass, to surround; to wrap up. சுற்றிக்கொண்டுபோகிறது, to go round about, to surround. சுற்றிப்போடுகிறது, to wind, *wire etc. about any thing*. ஒருத்தனைச்சுற்றுகிறது, to accost one often, to importune one. சுற்றிப்பார்க்கிறது, to look about. சுற்றித்திரிகிறது, to go about, to traverse a place or country up and down. சுற்று, சுற்றுவழி, a winding way, a circuitous road. சுற்றும், சுற்றிலும், round about, all about. சுற்றுப்பட்டார், சுற்றுப்புறத்தார், the inhabitants of the villages round about. சுற்றுப்பட்டுக்கிராமம், a village belonging to the town. சுற்றாரல், a wall round about.

• சுந்தரம், beauty. சுந்தரன், (சுந்தரி) a well looking person.

• சுபம், good. அசுபம், bad. சுபாசுபம், good and bad. சுபசுத்தி, bliss, glory. சுபகாரியம், சுபசேதி, a joyful thing, good news. சுபதாரம், a lucky-day; a festival day.

சுபந்தம், v. சுகந்தம்.

சுபாபம், v. சுவாபம்.

சுபை, a bailiwick. சுபையிலேவைக்கப்பட்டவன், one who is appointed to be the chief of a province. சுபையதார், the chief of a province; a captain of sepoys.

சுபோகி, a lucky man, one who enjoys all kind of prosperity.

சுப்பி, dry spray. சுப்பிபொறுக்கிறது, to gather dry spray. சுப்பியாய்ப்போகிறது, சுப்பிபோலுலர்ந்துபோகிறது, to grow lean.

சுமக்கிறது, to carry or bear any thing. சுமந்துகொள்ளுகிறது, to take a thing upon one's self. சுமந்துபோகிறது, to carry away.

சுமத்துகிறது, to lay *a charge or burden* upon a person, to charge one with a thing; to molest or pester one; to impute to one a balance in accounts as a debt. ஒருத்தன்பேரிலேகுற்றஞ்சுமத்துகிறது, to declare one guilty, to condemn one. மெத்தச்சுமத்தானவிலை, a very high rate or price.

சுமருகிறது, a debt, crime etc. to fall to the charge of a person. உன்பேரிலேசுமருங்கடன், the debt you owe. அவன்பேரிலேகுற்றஞ்சுமந்தது, he was found guilty.

சுமத்தலை, a duty, obligation, charge.

சுமத்தியானவிலை, an high price.

• சுமுத்திரை, சுமுத்திரை, right, exact, just. சுமுத்திரைக்காரன், a regular and just person. சுமுத்திரையாய்நிறுக்கிறது, to weigh justly. சுமுத்திரைப்படி, an exact or just measure.

சுமை, a burden. சுமையெடுக்கிறது, to carry a burden. சுமைதாங்கி, a stand of brick-work built on the road for people to put their burdens upon. சுமையாள், சுமைக்காரன், a porter, a carrier. சுமைக்கூலி, the wages for carrying a burden.

சுமைபுகிறது v. குமைபுகிறது.

சும்மாடு, a ring made of cloth or straw, which people lay upon their heads to carry a burden upon.

சும்மாயிருக்கிறது, to be at leisure, to be idle; to be put to no use, to lie idle. சும்மாய்க்கொடுக்கிறது, to give gratis. சும்மாய்ச்சொல்லுகிறது, to say a thing for pastime, to lie. சும்மாய்ச்சொல்லு, tell me without any fear. சும்மாய்வந்தான், he returned without success. சும்மாய்வந்தேன், I am come having no particular business.

சுயம், what proceeds from one's own capacity or will. சுயம்பாடுகிறது, to sing a song composed by one's self. சுயமாய், சுயமேபாய், of one's own accord. சுயம்பாரபத்தியம்பண்ணுகிறது, to be an independent man, to be master of one's self, to govern arbitrarily. சுயஞ்சாமியாய்ப்பண்ணுகிறது, to act by one's own authority. சுயாதிபதி, a monarch. சுயஞ்சோதியுள்ளசூரியன், the sun that has his own light.

• சுயம்பாகம், victuals ready for dressing. சுயம்பாகம்பண்ணுகிறது, to dress victuals. சுயம்பாகன், a cook. சுயம்பாகி, a woman-cook.

சுயம்பு. v. சுயம்.

சுரக்கிறது, to spring forth, to bubble up out of the ground *or from a rock*; to give plenty of milk (as *ex. gr.* the breasts of women or the udder of beasts.) சுரப்பு, the springing forth.

• சுரங்கம், a mine; a trench. சுரங்கமறுக்கிறது, to dig a mine; to make a trench.

சுரண்டுகிறது. v. சுறண்டுகிறது.

• சுரம், a fever. தாபசுரம், a burning fever. சுரமாய்க்கிடக்கிறது, சுரமாயிருக்கிறது, to be sick of a fever. சுரந்தணிந்துபோச்சுது (விட்டுப்போச்சுது) the fever is gone. சுரமுமுரமாயிருக்கிறது (உக்கிரமாயிருக்கிறது) the fever is violent.

சுரம், a wilderness. சுரபாதை, a way through woods.

சுரம், a note in musick, one of the seven tunes.

சுராளம் a gallop; swiftness. சுராளம்பிடிக்கிறது, (புறப்படுகிறது) to gallop. சுராளமாய்ப்போகிறது, to run; to go very fast, to ride in full gallop.

சுரி. v. சுழி.

சுரிக்கிறது, to be drawn in as the head of a tortoise.

சுருக்கம், brevity, shortness. சுருக்கமாய், சுருக்கத்திலே, briefly, in a few words. சுருக்கமானகாரியம், a trifle.

சுருக்குகிறது, சுருக்கிப்போடுகிறது, to shorten; to furl the sails, to wrap up the nets; to contract, to close.

சுருக்கு, a gin, snare, trap; a plait or fold. உட்சுருக்கு, a running or sliding knot. சுருக்கிடுகிறது. (போடுகிறது) to lay snares or gins. சுருக்கிலேமாட்டுகிறது, to catch in a snare. சுருக்கைக்கட்டுகிறது, to tie a band tight or close. சுருக்கைநெகிழ்த்திவிடுகிறது, to distend a gin. சுருக்குப்பை, a purse.

சுருங்குகிறது, to crumple, to shrivel to wrinkle. சுருங்கல், a wrinkle; a shrink.

சுருணை, a clew of yarn etc.

சுருணை, a tendril. கயிற்றுச்சுருணை, a clew of cords. கணக்குச்சுருணை, a packet of accounts.

சுருள், a roll. ஓலைச்சுருள், a cadjan-roll. பட்டுச்சுருள், a roll of silk. சுருள்மடிக்கிறது, to fold up beetel. அவனுக்குச்சுருள்கொடுத்தாள், she has given him a philter. சுருள்பண்ணுகிறது, to roll up a cadjan-letter. சுருளுகிறது, சுருண்டுபோகிறது, to be rolled up.

சுருட்டுகிறது, to roll up. சுருட்டு, a roll, tobacco leaves rolled up; any thing curled. சுருண்மயிர், crisp-hair.

• சுரூபம், an image. சுரூபமாயிருக்கிறவன் (*fem.* சுரூபக்காரி, சுரூபி,) a fair person. சுரூபங்கெட்டது, a thing spoiled or disfigured.

சுரேரேனக்கிறது, to hiss like a burning coal when thrown into water; to become terrified or frighted.

சுரோ v. சோரை.

• சுரோத்திரம், the ear; the hearing.

சுறுபம், சுறூபம், light, easy, facil; short; சுறுபமாய், சுறூபமாய், easily, without taking pains; in a few words; at a low price.

• சுலோசனம், சுலோசனை, spectacles.

சுலோகம், a versicle (a little verse.)

சுவடி, a little cadjan-book, a school-book. சுவடிசேர்க்கிறது, to make a book of cadjan-leaves. சுவடிபடிக்கிறது, to read; to learn. சுவடியவிழ்க்கிறது, to untie or open the book.

சுவடு v. செவ்டு.

சுவதந்திரியம், சுவாதந்திரியம், a privilege; liberty.

சுவர், சிவர், a wall. மண்சுவர், a mud-wall. கற்சுவர், a brick or stone-wall. குட்டுச்சிவர், a dead wall. சுவர்க்கோழி, the name of an insect which makes a strong noise. சுவரோட்டி, *a plant growing upon walls.*

• சுவல்பம், சுவற்பம், a trifle.

சுவறுகிறது, சுவறிப்போகிறது, to dry up as water. சுவறுகுடிக்கிறபானை, a pot that sucks up the water.

சுவற்ணம் v. சொற்ணம்.

• சுவாசம், the breath, breathing, respiration. சுவாசம்வாங்குகிறது, to take, to draw or fetch breath. சுவாசம்விடுகிறது, to breathe. உட்சுவாசம், the breath taken or drawn in. மேல்சுவாசம், a difficult breathing as is in dying people. நீட்சுவாசம், a deep-fetched breath. சுவாசம்நடக்குது, there is breath (in him.) சுவாசம்அமருது, the breath slackens. சுவாசம்அடங்கிற்று, the breath has ceased; the person is expired.

• சுவாஸ்தியம், revenues; wealth.

சுவாதந்திரியம் v. சுவதந்திரியம்.

சுவாதி, சோதி, a large star in the tail of the great bear; Arctos (or Arcturus.)

சுவாதீனம், one's own property.

சுவாபம், சுபாபம், the nature. சுவாபமானது, natural, inbred. சுவாபகுணம், the natural complexion. சுவாபமாய்ப்பேசுகிறது, to speak to the purpose; to say as it is. சுவாபக்காறன், a man that loves & speaks the truth. சுவாபசுரூபம், an image resembling the original. சுவாபமானநடக்கை, an honest life.

சுவாமி, God.

சுவாலை, a flame. சுவாலிக்கிறது, to flame; to be sweltry or vehemently hot. இந்தவீட்டிலேமெத்தச்சுவாலிக்குது, this house is exceeding close or hot.

• சுவாற்தம், the genuine signification of a word.

• சுவிகாரம், சுவீகாரம், the enjoyment of a thing. சுவிகரிக்கிறது, to use, to enjoy; to make a thing one's own.

சுவிசுக்கிறது v. சுக்கிறது.

சுவிசேஷம், joyful news, good tidings; the gospel. சுவிசேஷகன், one that brings good news; an Evangelist.

• சுவேதம், sweat.

சுவை, the flavor, taste; relish. அறுசுவை, six kinds of flavor, vizt. தித்திப்பு, புளிப்பு, கசப்பு, உப்பு, அழல், துவர், sweet, sour, bitter, saltish, keen, harsh.

சுவவென்றுவாங்கிப்போகிறது, to vanish as the moisture of the ground in the hot season.

சுழலுகிறது, to whirl, to whirl about, to turn circular by itself. சக்கிராகாரமாய்ச்சுழலுகிறது, to whirl about in a circle.

சுழல், a whirl. சுழலிலேஅகப்படுகிறது, to be taken by a whirl-wind; to fall in a whirl-pool. சுழற்றண்ணீர், a whirl-pool, சுழற்காற்று, a whirl-wind.

சுழற்றுகிறது, to whirl *a thing.* சுழற்றியெறிக்கிறது, to sling a thing.

சுழி, a circle, to curl. சுழிமுனை, the breath of the nostrils. சுழிக்குன்மம், சுழிமாந்தம், a distortion of the bowels. சுழிசுத்தம்பார்க்கிறது, to look whether a horse has some curled hairs, (*which people think to be a bad sign.*) சுழியிடுகிறது, to make a flexion with the pen. சுழிசுழிக்கிறது, to curl the comb put at the top of some letters, or the tail of some letters, *by which the syllable becomes long.*

சுழிகிறது, to curl by itself; to become afflicted in the mind.

சுழிக்கிறது; to curl a thing. சுழிக்கச்சொல்லுகிறது, to speak not plainly but deceitfully.

சுளகு, a fan to winnow corn with. சுளகாலேபுடைக்கிறது, to winnow with a fan. சுளகாலேஅடிக்கிறது, to strike *one* with a winnowing fan, *which is regarded as an affront.*

சுளாவுகிறது, சுளாவிக்கழுவுகிறது, to wash *a pot etc.*

சுளிகு, a pike-staff; any sharp-pointed stick.

சுளுக்குகிறது, சுளுக்கிப்போகிறது, to be wrenched, sprained, over-strained or dislocated. காற்சுளுக்கிற்று, the foot is sprained.

சுளுக்கு, a sprain. சுளுக்குப்பார்க்கிறவன், one that cures sprains, or puts limbs into joints again. சுளுக்குவழிக்கிறது, to stroke a sprained limb. சுளுக்குக்குத்தடவுகிறது, to anoint a sprained limb. சுளுக்குகேற்றிவிடுகிறது, to make a sprain grow worse.

சுளுந்து, dry spray-faggots.

சுளை, the bulbs within a jack-fruit, consisting of the flesh and kernels of it. சுளையெடுக்கிறது, to take the said bulbs out.

சுள்ளக்கன், an angry person.

சுள்ளாப்பு, an excessive heat of the sun.

சுள்ளி, dry sprays for fire.

சுள்ளுசுள்ளென்கிறது, to be excessive hot.

சுளை v. சூளை.

சுறண்டுகிறது v. சுறுண்டுகிறது.

சுறு, the filth or nastiness of the body. சுறுபிடித்திருக்கிறது, to be filthy, foul, dirty.

சுறு, சுறுமீன், a shark. (*Peixe caixaõ, tubaraõ.*) வெள்ளாச்சுறு, கொம்பஞ்சுறு, குராகன்சுறு, ஓங்கல்சுறு, வழுவன்சுறு, *it's different species.* பால்சுறு, வெண்மணச்சுறு, *kinds of ditto that are eatable.* சுறுக்குட்டி, the young ones of a shark.

சுறுண்டுகிறது, to scrape.

சுறி v. சொறி.

சுறிரெனக்கிறது, to smart excessively.

சுறுக்கு, quickness, haste; sharpness; severity, rigor. சுறுக்குக்காறன், a hasty or rigorous man. சுறுக்காய், quickly; rigorously. சுறுக்கில்லாதவன், a lazy man; a cool-tempered man. சுறுக்குக்காட்டுகிறது, to shew rigor. சுறுக்கானகத்தி, a sharp knife. சுறுக்கிடுகிறது, to get a scar; to smart. சுறுக்கிடச்சொல்லுகிறது, to make one startle by what is said; to offend one by severe language.

சுறுசுறுப்பு, ardency, fervency, activity, alacrity.

rity.

சுனை, a spring (or fountain) in a hill or rock. சுனைவு, rock-water.

சுன்னத்து, circumcision. சுன்னத்துப்பண்ணுகிறது, to circumcise.

• சூகரம், a hog.

சூகை, a room in the hind part of a house; a closet. சூகைக்கேட்டிடக்கிறது, to slip in for to listen. நீரென்னுடைய சூகைக்குள் இருந்து வந்தல்லவோ, have you not lived betwixt my walls (or in my house) by my charity?

சூகை v. எழுமபு.

• சூசனை, judiciousness; quickness of fancy; exactness; a sign, a wink. சூசனை பார்க்கிறது, to look narrowly into a thing. சூசனையாய்ச்சொல்லுகிறது, to speak with accuracy. சூசனைக்காறன், one who is accurate or exact.

• சூசகவாயவு, a hysterical disease.

• சூக்ஷம், சூட்சம், subtil, artificial. சூக்ஷமான வேலை, an artificial or fine work. சூக்ஷமாய்ப்பேசுகிறது, to speak artfully. சூக்ஷக்காறன், சூட்சதாரி, a cunning fellow. சூக்ஷமாய்ச்சொல்லிப்போட்டுவாறது, to pacify one by speaking discreetly & softly. சூட்சமான காரியம், a slight business, a trivial matter. சூக்ஷசரீரம், a fragile body.

• சூஸ்த்திரம், சூத்திரம், an artificial piece of work. சலசூஸ்த்திரம், a water-work, hydraulicks. சூஸ்த்திரக்காறன், சூஸ்த்திரதாரி, an artist, an ingenious workman; a man of sharp wit. சூஸ்த்திரமான வேலை, சூஸ்த்திரம் வைத்தவேலை, an engine. சூஸ்த்திரப்பதுமைகூத்தாடுகிறவன், a puppet-player; a very wicked man; too daring a man; a wag. கவடசூஸ்த்திரம், a deceiving engine; a cheat.

சூடம் v. சீவிடம்.

சூடு, a bundle of paddy cut in the field. கைச்சூடு, ditto, given to the reapers. கண்ணாடிச்சூடு, ditto, given to the barber for keeping a looking glass. கஞ்சிச்சூடு, ditto, given to the washerman for starching the clothes with conjey.

சூடு, a burning or brand. சூடுகிறது, சூடுவிடுகிறது (போடுகிறது) to brand calves or sick cows. எந்தச்சூடு சூடியிருக்குது, what mark is the calf etc. branded with? சூட்டுக்கோல், a brand-iron. சூடுண்டவன், one marked with a brand-iron. சூடுகண்டபூனை அடுப்பங்கரையிலே நாடாது, a burnt cat won't come near the hearth, a burnt child dreads the fire.

சூடுகிறது, முடிசூடுகிறது, to be crowned. முடிசூட்டுகிறது, to crown.

சூடைமீன், the name of a little fish.

சூட்சம் v. சூக்ஷம்.

சூட்டுகிறது, to aim at, to drive at. ஒன்றைச்சூடிச்சொல்லுகிறது, to allude to a thing, or aim at it in a speech. சூட்டாவிரல், the forefinger wherewith you point. ஒருத்தனைச்சூட்டாய்ப்பார்க்கிறது, to explorate one slyly; to observe one.

சூணம், சூணும்வயறு v. சூனை.

• சூதகம் the uncleanness of a monstruous woman, or of a house wherein one died. சூதகக்காரி, சூதகஸ்திரீ, a menstruous woman. சூதகமானவீடு, a house wherein one died. சூதகவாயவு, வயிற்றுநோவு; a hysterical disease, a fit of the mother.

• சூதானம், cautiousness, circumspection. சூதானமான இடம், a secure place.

ளையாடுகிறது, to play for money etc. சூதாடுகிறவன், சூதுகாறன், சூதாட்டக்காறன், a gambler, a player. சூதாட்டம், playing; gambling; deceiving. சூதுபண்ணுகிறது, to deceive, to play a trick.

சூத்திரம் v. சூஸ்த்திரம்.

சூத்திரசாதி, the last of the four principal tribes among the Indians. சூத்திரன். சூத்திராள், சூத்திராளன், (fem. சூத்திரச்சி,) one of that tribe.

சூத்து, the back-parts, the posteriors; breech; fundament.

சூப்புகிறது, சூப்பிப்போடுகிறது, to suck the substance of a thing. சூப்பியெறிகிறது, to throw a thing away after having sucked out the juice of it.

சூம்புகிறது, to shrink.

• சூரணம், a medicinal powder. சூரணம் பண்ணுகிறது, to make a medicinal powder, புடஞ்சூரணமாய்ப்போடுகிறது, ditto, by calcining the ingredients; to squander your goods away.

• சூரன், a hero (fem. சூரி, a heroess.) சூரம் (சூரத்தனம்) பண்ணுகிறது, to do heroical exploits. சூரத்தனமாயிருக்கிறது; to be heroick.

சூரி, சூரக்கத்தி, a little knife.

• சூரியன், the sun. சூரியோதயம், the rising of the sun. சூரியகாந்தி, the splendor or heat of the sun. சூரியனுதிக்குது, the sun rises. சூரியகாந்தம், a burning glass. சூரியகாந்தப்பட்டு, சூரியகாந்து, velvet. சூரியகாந்தப்பூ, a sun-flower. சூரியக்கிரணம், a sun-eclipse. சூரியபிம்பம், the appearing disk or orb of the sun. சூரியபுடமாயவைக்கிறது, to extract the juice of a thing by the heat of the sun.

சூருகிறது, to adapt cotton for spinning by tousing or drawing it with the thumb and forefinger. சூர்ந்த (சூந்த) பஞ்சு, cotton so toused.

சூரை, the Indian juniper-tree. சூரைக்காய், சூரைப்பழம், Indian juniper-berries.

சூரை, the name of a fish.

சூரை, corn in the field getting no ears.

• சூலம், a fork with three prongs; a superstition not to go on such a day to a certain place, thinking it to be an unlucky day.

சூலை. சூலைக்கட்டு, stiffness or contraction of the nerves. பக்கச்சூலை, obstruction of the liver.

சூல், a woman's breeding or pregnancy; tender corn-ears. சூலாயிருக்கிறது, to be a-breeding. சூலி, a woman with child.

சூலை, horse-elephant or bullock's clothes.

சூவானம், சூவாரம், a kitchen. சூவானக்காறன், (fem. சூவானக்காரி) a cook.

சூழி, what supports in the wall the eaves of the house.

சூழுகிறது, சூழ்ந்துகொள்ளுகிறது, to environ, to surround, to encompass. சூழப்பட்டது, surrounded. சூழ, round about.

சூறவளிக்காத்து, a whirl-wind. சூறவளிச்சுத்துக்காறன், a man like a weather-cock that turns to every wind; a sickle. சூறவளிச்சட்டம். a wicker-work; the bottom of a well.

சூறை, prize, pillage. சூறையாடுகிறது, to rifle, to ransack, to plunder, to pillage. சூறைவிடுகிறது, சூறையாயவிடுகிறது, to make prize of a thing. சூறைக்காத்து, a tempestuous wind destroying every thing.

சூறுவயறு v. சூனை.

• சூனியம், witchery, witchcraft, enchantment, sorcery. சூனியம் வைக்கிறது, to bewitch by hiding something in the ground. சூனியக்காறன், a wizard.

sorcerer. குனியம்பிடித்தவன், one who is bewitched. குனியமாயிருக்கிறவீடு, a house that is bewitched. குனியம்பூமி, a bewitched ground. குனியமாறுகிறவன், one who knows to take the witchery away.

குன், குனிவயிறு, குனிமவயிறு, a swelling of the belly. குனிபிடித்தவன், குனன் (fem. குனி,) one whose belly is swollen. குனியப்போனசுவர், a wall that swells out, or bunches out.

• செகம், the world; the earth. செகமும்பரமும், earth and heaven. செகத்திலேவழங்கிறவழக்கம், a thing customary in the world. செகசண்டன், the most stubborn man in the world.

செதிள், fish-scales. செதிள்வாங்குகிறது, to take off the scales of a fish.

செகுடன், செகுடு v. செவுடன், செவுடு.

செகை, a weft made of man's hair.

செக்கு, an oil-press. செக்காடுகிறது, to press rape-seed etc. to make oil. செக்கான், one that works at the oil-press. செக்கான்துணி, a greasy or smutty clout.

செங்கத்தரணம், a bag which people hang on their shoulder.

• செங்கமம், living creatures moving upon earth.

செங்கல், bricks. செங்கலறுக்கிறது, to mould bricks. செங்கற்கட்டளை, a mould for it. பச்சைச்செங்கல், பச்சைக்கல்லு, raw bricks. செங்கல்சுடுகிறது, to burn bricks. செங்கற்பொடி, broken bricks, rubble, rubbish. செங்கற்பால், brick meal diluted with water.

செங்களா v. செம்பிஷ.

செங்கீரை v. கீரை.

செங்குத்தாயிருக்கிறது, to be perpendicular, steep. செங்குத்தான கல்மலை, a steep rock, a precipice.

செங்கொடுவேலி v. கொடுவேலி.

செங்கோல், a scepter, royal staff. செங்கோலாளுகிறது, to reign, to manage the scepter. செங்கோல்கோணாமலரசாட்சிபண்ணுகிறது, to reign with perfect justice. செங்கோல்கோணினால் எங்கும் கோணம், unjust government causes irregularity every where.

செச்சை, the upper-part of a house.

செச்சை, a he-goat.

செஞ்சம்பா, very good paddy.

செஞ்சி, Gingee, *a fort so called*.

செடி, a shrub, a little tree. செடிக்காடு, a thicket of bushes. செடிலாடுசல், a machine by which a heathen fisher-man voluntarily tortures himself, hanging in the air on a hook which is driven through the skin of his back.

செட்டிசாதி, the tribe of merchants. செட்டி, (fem. செட்டிச்சி) one of the merchants tribe, a merchant by birth. செட்டித்தொழில்பண்ணுகிறது, to traffick, to trade. மல்லுச்செட்டி, one of the tribe of wrestlers or fighters at cuffs. வெள்ளாளச்செட்டி, a merchant of a certain tribe.

செட்டு, trade. செட்டுப்பண்ணுகிறது, to trade. செட்டுக்குவாங்கிவைக்கிறது, to buy up things for selling.

செட்டை, a wing.

• செணம், செணப்பொழுது, a moment. செணத்திலே, செணத்துக்குள்ளே, in a moment. செணப்பொழுதுபொறு, stay a moment. அச்செணமே, that same moment. செணமே, this moment, immediately.

செண்டு, a ball to play with; a nose-gay. செண்டுவெளி, a place for playing with balls. செண்டாடுகிறது, to play with balls.

• செண்பகம், the Indian cuckoo. *Poparram.*

செண்பகம், சண்பகம், செண்பகமரம், the champawk-flower-tree. செண்பகப்பூ, the champawk-flower. சிறுசெண்பகம், *another lower kind of it*.

செதுக்குகிறது, செதுக்கப்போடுகிறது, to cut a timber or plank smooth; to smooth the ground by [illegible] the grass. செதுக்குப்பாரை [illegible] செதுக்கி, a tool for removing [illegible] the walks.

[illegible] போகிறது, to die. v. சாகிறது.

[illegible] செறுமை, spray.

[illegible], high Tamul, high Malabar.

[illegible], a pine-apple-plant.

[illegible], red color.

[illegible] கம். செந்திரிகை. செந்துருக்க [illegible] of a cadjan-letter. ஓலையைச்செந்திரிக்கத்திலேயடைக்கிறது. (அடைக்கிறது) to enclose the cadjan-letter under a cover.

• செந்து, சந்து, (pl. செந்துக்கள்.) living creatures. சீவசெந்துக்கள், *ditto*.

செந்துருக்கு, *the name of a plant*. செந்துருக்கம்பூ, *it's flower*.

செந்தூரம் v. சிந்தூரம்.

செந்தூள் v. தூள்.

செந்தொட்டி, a nettle.

• செபம், சபம், prayer, oration. செபம்பண்ணுகிறது, to pray; to offer up prayers. செபத்தியானம், devout praying. செபத்தியானமாயிருக்கிறது, to be intent at prayer.

செபிக்கிறது, to pray to God.

செப்பட்டை, a wing.

செப்பம், செப்பன், even, in good order. செப்பனிடுகிறது, செப்பம்பண்ணுகிறது, to repair, to mend, to rectify; to make, to build, to dress. செப்பமாயிருக்குது, it is done, it is ready.

செப்பு, a little pot or cup. செப்பிடுவித்தை, juggles, juggling tricks of legerdemain. செப்பிடுவித்தைக்காரன், a juggler.

செப்புகிறது, to say, to speak (*a gentoo-word.*)

செப்புநிறம், செப்புவன்னம், brass-color, copper-color.

செப்பூசி, a copper-needle. செப்பூசியேற்றுகிறது, to torture by driving a copper-needle into one's fingers.

செம்பகம் v. செண்பகம்.

செம்பஞ்சு, red cotton cleared of the seeds.

செம்படவன், one of the tribe of fishers that fish in rivers.

செம்பட்டைமயிர், செம்படடைமயிர், red hair.

செம்பரத்தை, the shoe-flower shrub.

செம்பருத்தி, red cotton not yet cleared of the seeds.

செம்பருந்து, a red hawk.

செம்பாதி, exactly the half part.

செம்பாளை, செம்பாளைநெல்லு, a kind of reddish paddy.

செம்பிளிச்சங்கட்டை v. சீதாரி.

செம்பிலிமீன், the name of a fish *Peixe rotine*.

செம்பு, copper, brass, latten; a drinking cup of brass. செம்புப்பணம், a copper-fanam. செம்புப்பாத்திரம், செம்புக்கட்டி, a lump of copper

or brass. செம்புத்தகடு, a thin flat piece of copper. செம்புக்கம்பி, brass-wire.

செம்புகம், செம்போத்து v. செண்பகம்.

செம்பூரான் v. பூரான்.

செம்மை, the name of a tree fit for fagots. நீர்ச்செம்மை, வயற்செம்மை, கருஞ்செம்மை, different kinds of it.

செம்மண், red earth.

செம்மரம், red wood.

செம்மறியாடு, செம்மறியாடு, செம்மறியாடு, a reddish sheep.

செம்மாணி, a kind of fine Indian shoes.

செம்மாரம், red clouds. செம்மாரமிட்டிருக்குது, the clouds are red.

செம்மான் (fem. செம்மாத்தி) a shoe-maker. செம்மார், the shoe-makers.

செண்பகக்கிறது. v. செம்பிக்கிறது.

செமிக்கிறது, செமிம்மைவைக்கிறது, (போடுகிறது) செமிம்படுக்கிறது. to lute, to cover with loam or clay. வயிறு செமிம்பிருக்குது, (செமிம்புபோலேயிருக்குது) the belly is hard. செமிம்பப்போச்சுது, the color is gone through; the cloth has transmitted the painting.

செம்முளரி v. முளரி.

செம்மை, right, just. செம்மையாய்நடக்கிறது, to live uprightly. செம்மைப்பட்டது, right, honest, just.

* செயம், சயம், victory; good success. செயசெயா, huzza; victory! செயமாச்சுது, the thing has happily succeeded. செயங்கொள்ளுகிறது, செயிக்கிறது, to get the victory. செயமாய் வாறது, செயித்துக்கொண்டுவாறது, to come off victorious. செயமாக்கிக்கொள்ளுகிறது. செயித்துப்போடுகிறது, to vanquish, to defeat, to subdue or overcome the enemy. செயிக்கப்பட்டவர்கள், those that are vanquished. அதிசெயிக்கிறது, to be more than conqueror.

செய்கிறது, to do. செய்யாதகாரியஞ்செய்கிறது, to do a bad thing. செய்காலம், a fit or convenient time to do a thing. செய்கை, an action; work; behaviour. நானெழுதச்சே (செய்தே) whilst I was a-writing; whilst I did write. செயல், providence; a doing. செயலாய், செயலினாலே, by providence. தெய்வச்செயல், God's doing, God's providence. செயலற்றவன், one not favored with God's help. தற்செயலாய், by chance.

செய்தி, சேதி, a notice about what happened, news, intelligence. செய்தியைவிசாரிக்கிறது, to inform one's self of the news. நடந்தசெய்தியைச்சொல்லுகிறது, to report or relate what happened. ஒருத்தனுக்குச்சேதியனுப்புகிறது, to send one intelligence (to give one notice.) எனக்குச்செய்திவந்தது, I have got the news (I received intelligence.) செய்தியைக்கொண்டுவந்தான், he has brought news.

செய்யான், a centipede.

செய்வினை, a doing or work in general; a work destructive as poison.

செரிக்கிறது, to concoct; to digest. செரித்துப்போறது (வாறது) to become digested. செரியாக்குணம், indigestion. செரியாக்குணத்தினாலேவந்தது, it is derived from indigestion. செரித்துவருகிறநேரம், the time of concoction.

செருக்கிறது v. செதுக்கிறது.

செருக்கிறது, to be like to be choked, stifled or smothered. எனக்குச்செருக்கிறது, I was almost stifled.

செருக்கு, fatness; a high or delicious living feasting, banqueting, living deliciously. நின்றுசெருக்கிறது. நிணச்செருக்குப்படுகிறது, to grow fat (or lusty) செல்வமுஞ்செருக்குமாய், in pleasure and deliciousness. செருக்காய்வளர்க்கிறது, to breed up in a delicate manner. செருக்குக்கொண்டொழிந்தது, the delicate living has an end.

செருப்படை, the name of a plant.

செருப்பு, shoes with latchets instead of the upper-leather; sandals. செருப்பாலேயடிக்கிறது, to strike one with a shoe, which is looked upon as a great affront. செருப்பூசி, a shoemaker's punch.

செருமல், a beast's cough.

செருமுகிறது, a beast's coughing; it's being pursy or shortwinded.

செலசெலவெனக்கிறது, the murmuring of a stream, the rushing of leaves etc.

செலம் v. சலம்.

செலத்தியாய்வளருகிற பயிர், corn etc. vegetables well growing.

செலிக்கிறது, to grow confounded in mind. செலித்துப்பார்க்கிறது, to be at a stand, to be perplexed.

செலுத்துகிறது, செலுத்திப்போடுகிறது, to pay; to fulfil a vow, a promise, a duty.

செலுப்புகிறது, செலுப்பிக்கொள்ளுகிறது, to bristle, to be angry. செலுப்பிக்கொண்டிருக்கிறான், he is in a great passion.

செலவு, spending; expenditure.

செல்லு, செல்லுப்பூச்சி, white ants (smaller than கறையான்) செல்லரித்தது, செல்லரித்தது, corroded by white ants.

செல்லுகிறது, to go; to be current, valid, good in law; to be required for such and such a thing; to pass with regard to time; to appertain by right. அருகேசெல்லுகிறது, to approach. பின்செல்லுகிறது, to follow. சென்றுபோறது, to depart this life, to die. செல்லாப்பணம், a bad fanam. செல்லுஞ்சீட்டு, a bond that is valid; a receipt. செல்காரியம், a thing now present, current; a thing that is valid, fit, proper. செல்வாக்கு the validity of one's words; authority. அதைக்கட்டுகிறதுக்குவெகுபணஞ்செல்லும், much money will be required to build it. செல்காலம், the time now passing. சென்றகாலம், the time past. அவன்வரவெகுநாள்செல்லும், a long time will pass before he comes. செல்லுஞ்சுதந்திரம், a heritage belonging to you by right.

செல்வம், wealth, felicity, deliciousness; a flourishing state. செல்வவனம், செல்வப்பூஞ்சோலைவனம், a garden of pleasure, a paradise. செல்வமாய்வளர்க்கிறது, to breed up delicately. செல்வப்பிள்ளை, a child that is tenderly brought up. செல்லங்கொஞ்சுகிறது, to play with a child. செல்வன் (fem. செல்வி) a person living in plenty & affluence. செல்வமுஞ்செருக்குங்கொண்டிருக்கிறது, to live in wealth and deliciousness.

செல்விக்கை, deliciousness.

செவ்வத்தவேர், the root of a turpentine shrub.

செவி, the ear; the hearing. செவியிலேபேசுகிறது, to whisper in one's ear. செவிகேளாதவன், a deaf man. செவிகொடுக்கிறது, to give ear, to listen; to give audience. செவிதினைக்கிறவன், a whisperer, a flatterer. செவியிலேதைக்கச்சொல்லுகிறது, to speak with energy so as to make impression. செவியேறுகிறது, to come to one's ears (or knowledge.) செவியேற்றுவிக்கிறது (ஏறவைக்கிறது) to convey a thing to one's knowledge.

செவிடு, செகிடு, செவிடு, deafness. செவிடன் (*fem*. செவிடி) a deaf person.

செவ்வந்தி, *the name of a flower-plant*. செவ்வந்திப்பூ, *it's flower*. மஞ்சட்செவ்வந்தி, சீனச்செவ்வந்தி, அரிமஞ்சள்செவ்வந்தி, துலுக்குச்செவ்வந்தி, *different kinds of that plant*.

செவ்வாம்பல், *the name of a red flower*.

செவ்வாய், Mars, the planet. செவ்வாய்க்கிழமை, Tues-day.

செவ்வாரம், a just dividing of the product of the field between the owner and the farmer.

செவ்வியம், *the name of a plant*.

செவ்விளநீர், a half-ripe coco-nut of a reddish kind.

செவ்வை, right, even, strait, direct. செவ்வையானவழி, a strait way. செவ்வையேபோகிறது, to go strait on.

செழிக்கிறது, செழித்துவளருகிறது, to grow well, to flourish. செழித்திருக்கிறமை, செழிப்புள்ளநாடு, a fertil or fruitful country. செழித்தநோக்கம், the looking *upon one* with a good eye. செழிப்பு, fertility; a good and jolly look.

செழும்பல், fertility. செழும்பலாயவளருகிறது, to thrive exceedingly well, to grow in a flourishing manner.

செளிக்கிறது *v*. செழிக்கிறது.

செஸிக்கி *v*. சிஸிக்கி.

செற்றெழுத்து, செத்தெழுத்து, a consonant without a vowel.

செறவை *v*. செதவை.

செனிப்பு, pimples, pustules, blains, heaps. உடம்பெல்லாஞ்செனிப்புக்குருத்துக்கொண்டிருக்குது, the body is full of pimples.

செனமம் *v*. சனமம்.

செனமம் *v*. ஜெனமம்.

* ஜென்னமம், ஜென்மம், the nativity; birth. ஜென்னமெடுக்கிறது, to be born. ஜென்னகாலம், the time at which any one was born. ஜெனமவாரம், the birth-day. ஜெனமப்பாவம், the original sin. ஜெனமப்பகை, an innate hatred. ஜென்மபூமி, the native country. ஜெனமபாஷை, the mother language.

செனனல், *the name of* a fish.

செனிக்கிறது, to be generated. செனிப்பிக்கிறது, to generate, to procreate. செனிப்பு, generation.

சினை, the hard row of fishes, the row in the female fishes; the young where with a beast is big (or teeming.) சினையாகுது, சினைப்பட்டிருக்குது, சினையோடிருக்குது, *the beast* is with young (or big with young ones.) சினைமாடு, a cow big with calf. சினையாடு, an ewe with young. சினைப்படாமல்மலடானமாடு, a steril cow.

செனமம் *v*. ஜென்மம்.

செனமிக்கிறது, to be born. செனமிப்பு, generation.

சென்றகாலம், the time past.

செனறுய, செனறுயருவி *v*. நாய.

சென்னி, the head.

சென்னீர், blood.

செனனெல், *a very good kind of* paddy.

சேகரம், ready, well finished. சேகரம்பண்ணுகிறது, to make a thing ready; to bring it about. சேகரமாச்சுது, it is done, it is ready.

சேகரிக்கிறது, to bring several things properly together.

சேகு, the pith or marrow of a tree, the grain of the wood. சேகுமரம், சேகுப்பிடித்தமரம், a tree whose fruit consists of a good hard grain.

சேக்கரிக்கிறது, the cackling of a hen after laying an egg.

சேகுகொண்டை *v*. சேவல்.

சேங்கொட்டை *v*. சேராங்கொட்டை.

சேசேயென்றுகிடக்கிறது, to be full of noise and bustle.

சேஷம், சேடம், சேஷிப்பட்டது, the remainder upon plates etc. reputed to be unclean.

* சேஷன், சேடன், a serpent. ஆதிசேஷன், the old serpent.

சேஷ்டன், an elder brother; a superior; a senior. சேஷ்டை, an elder sister; a woman of distinction among the rest.

* சேஷ்டை, gests; indecent gests. சேஷ்டைபண்ணுகிறவன், a man of wanton manners. புருஷசேஷ்டைபண்ணுகிறது, to make indecent gests before a woman. சேஷ்டைக்காரன், சேட்டைக்காரன், a petulant fellow. குரங்குச்சேஷ்டை, apish gests.

சேடம் *v*. சேஷம்.

சேடன் a weaver *of a certain tribe*.

சேணம், a saddle. சேணம்போட்ட (வைத்த, கட்டின) குதிரை, a saddled horse. சேணந்தைக்கிறவன், a saddler, saddle-maker.

சேணோர், the inhabitants of heaven.

சேணியன் (*fem*. சேணிச்சி) a gentoo-Weaver.

* சேதம், சேதாரம், damage, destruction. சேதப்படுகிறது, to suffer damage. சேதப்படுத்துகிறது, to hurt, to damage, to destroy. சேதமாய்ப்போச்சுது, to grow damaged, to be spoiled. கப்பல்சேதமானாலும்ஆள்சேதமில்லை, the ship is lost, but none of the crew. ஒருத்தனைச்சிரச்சேதம்பண்ணுகிறது, to behead one.

சேதனம், intellect. சேதனம், incision.

சேதாரம், the waste *of gold, silver etc. when melted, filed, beaten, wrought etc. the damage with regard to any kind of commodities or stores of grain, wherefore an abatement is to be allowed*.

சேதி *v*. செய்தி.

சேதிக்கை, access.

சேதுபம் *v*. சிநேகிதம்.

* சேமம், a room, a prison, a hole. சவச்சேமம், a grave.

சேமன், a cunning fellow. கனசேமன், an arch-knave, a prime rogue.

சேம்பு, சேமை, சேம்பு, *the name of a garden-plant*. சேம்பந்தண்டு, *it's stalks*. சேம்புக்கிழங்கு, *it's roots or bulbs*. சேம்பிலை, *the large leaves of it*.

சேர *v*. சேருகிறது.

சேரன், a name anciently given to the malabar kings.

சேரர், an appellation, anciently given to the Lords of the countries on the pepper-coast.

சேராங்கொட்டை, சேங்கொட்டை, kernels of whose black juice linnen can be marked. சேராங்கொட்டைப்பால், the juice of those kernels. சேராங்கொட்டைக்குறி, a mark made with it.

சேரி, a village, a town. பறைச்சேரி, a Parriar-village.

சேருகிறது, to approach, to come near, to belong to.

side with one. வந்துசேருகிறது, to arrive. சேர்ந்துபோகிறது, சேரப்போகிறது, to draw near, to go near to approach. சேர, near, nigh. சேர்க்கட்டுகிறது, to tie close together. சேர்ந்தமனுஷர், near friends, relations, people belonging to the house or family. அதுஎன்னைச்சேர்ந்தநிலம், that ground belongs to me. சேருகால்பூட்டுகிறது, to tie the fore-feet *of a feeding horse, ass etc.* together. சேர்விலங்கு, irons to fasten people together.

சேருவை, சேர்வை, a plaster. சேருவைகூட்டுகிறது, to prepare a plaster. சேருவைபோடுகிறது, to put a plaster *on a wound*.

சேருவைக்காரன் v. சேருவை.

சேர், கசசாசேர், eight palams or Indian ounces. பககாசேர், twenty four palams.

சேர்க்கிறது to gather together; to set, to put, to join or link together; to receive into company. சேர்த்துக்கொள்ளுகிறது, to take one up; to lodge, to harbour, to shelter or receive *a person*.

சேர்க்கை, union.

சேர்வை, a body of soldiers; a command over a body of soldiers. சேர்வைக்காரன், a commander of a body of soldiers.

சேலை, a women's cloth.

சேல், சேலகெண்டை v. கெண்டை.

சேவகம், a service; a military service. சேவகமெழுதுகிறது, to list or enrol soldiers. சேவகமெழுதிக்கொள்ளுகிறது, to enlist for a soldier. ஒருத்தனைச்சேவகமமர்த்துகிறது, to get service for a person as a soldier or peon. சேவகன், a military man; a peon. சேவகவேஷம், armed cap-a-pe.

சேவல், watching the corn in the field. சேவலாளன், a watchman in the field.

சேவிக்கிறது, to serve as a servant or soldier. சேமானைச்சேவிக்கிறது, to serve and respect the master. சுவாமியைச்சேவிக்கிறது, to serve and worship God.

சேவுகம v. சேவகம.

சேறு, dirt, mire. சேற்றிலேவிழுகிறது, to fall into the mire. சேறுகூட்டுகிறது, to make clay.

சேறுக்கிறது v. சேர்க்கிறது.

சேற்றுக்கை v. சேத்திக்கை.

சேறுபாந்து, a scourge.

சேனு, *a kind of an eel*, with a piked head; *the name of a plant*. நீர்ச்சேனு, காட்டுச்சேனு, *different kinds of that plant*.

✦ சேனாபதி, a general, commander of an army. சேனாபதிப்பட்டம், சேனாபத்தியம், the post of a general; the chief command.

✦ சேனை, an army; a multitude; many. சேனைகூட்டுகிறது, to gather troops.

சைகை, சய்கை, a wink or twinkling of eyes. சைகைகாட்டுகிறது, to wink.

சையோத்தியம், communion, familiarity with one another.

சொகம v. சுகம.

சொக்கா, tamback, *a composition of metal*. சொக்காவிலேபண்ணுகிறது, to make *a ring etc.* of tamback.

சொக்கு, the attire of an amorist, fine dress. சொக்குக்காரன், an amorist, one who is enamoured. சொக்குப்பண்ணுகிறது, சொக்குத்தனம்பண்ணிக்கொண்டுதிரிகிறது, to be enamoured.

சொக்கட்டான், சொக்கட்டான், a tick-tack-

p... சொக்கட்டானாடுகிறது, to play it.

... சொக்கம், good; goodness of gold, silver etc.

... சொக்கார், *the name of an herb*.

... சொக்காய், a jacket of an Indian.

... சொக்கு, the state of being out of wits. சொக்குப்பொடிபோடுகிறது, to put a pinch of ... ng powder upon one (*to make him obsequious for certain purposes*.) சொக்குவித்தை, சொக்குவித்தை, the art of such enchanting.

சொச்சம், the overplus; the interest. சொச்சத்துக்குக்கொடுக்கிறது, to lend on interest. சொச்சமுமுதலும், principal and interest. சொச்சவிலையிலேகொள்ளுகிறது, to buy for a trifling price.

✦ சொஸ்தம், health. சொஸ்தமாகிறது, to recover.

சொஸ்தானம v. சுவஸ்தானம.

சொட்டுப்போடுகிறது, to knock on one's head with both the hands for jest's sake.

சொட்டை, what is bent or crooked, as the sheath of a sword.

சொத்தை, riches.

சொத்தைவெட்டாய்வெட்டுகிறது, to cut with insufficient strength, or with a blunt axe. சொத்தைக்கையன், a man with crump hands.

சொத்து, goods, ability.

சொத்துக்கட்டுப்பூசுகிறது, to dawb *the arm* with a red color, for to make people believe that the arm is broke.

சொத்தை, worm-eaten, rotten. சொத்தைப்பாக்கு, a worm-eaten beetle-nut. சொத்தைப்பல்லு, a rotten tooth.

சொந்தம், property. என்னுடையசொந்தம், my own property. சொந்தக்காரன், the owner; proprietor.

சொம், riches; an heritage. சொம்மாளி, சொக்காரன், an heir.

சொரிகிறது, to run down as corn shooted out of a sack, or as rain, milk, tears etc. *Item* to make run down. அம்புமாரியைச்சொரிந்தான், he sent a shower of arrows. சொரிந்தளக்கிறது, to mete grain by shooting it into the corn-measure. சொரிவராகன், pagodas shooted any where, and not tied up in a bag. சொரிவு, flowing or running down.

சொரிகுறும்பை, *a kind of* paddy.

சொருகிறது, சொருகிவைக்கிறது, (போடுகிறது) to put, to stick or slide *a thing* in. சொருகிக்கொள்ளுகிறது, to stick *a thing* into the bosom, girdle, pocket, hair etc. என்கண்ணைச்சொருகிக்கொண்டுவருகுது, sleep seizes mine eyes. என்வயிற்றைச்சொருகிக்கொண்டிருக்குது, it pinches my belly. சொருகலாயிருக்கிறவன், one who has the gripes. சொருகலான கண், eyes that lie deep in the head. சொருகுதோவத்தி, a cloth that goes round the waist, and is dock'd in.

சொரை, சொரைக்காய், சுரைக்காய், *a kind of* pumpkin, a water gourd. *Bouro de agoa*.

சொல்லு, permission.

சொல், a word, an expression; a phrase. சொல்லாரிமை, a fine emphetick expression. சொல்லலங்காரமாய்ச்சொல்லுகிறது, to speak elegantly. சொற்குற்றம், சொற்பிழை, a word, phrase or pronunciation contrary to rule. சொற்சாதுரியம், eloquence. சொற்கேளாதவன், a disobedient person. சொற்படிநடக்கிறது, to be obedient.

சொல்லுகிறது, to say, to tell. நான்சொன்னதைமனதிலேவை, mind or take to heart what I said. சொல்லிக்கொடுக்கிறது, to teach. இவனுக்குவிசுவாசப்பிரமாணத்தைச்சொல்லிக்கொடு, teach him the Creed. சொல்லிவைக்கிறது, to intimate, to acquaint, to advertise. சொல்லிக்காட்டுகிறது, to shew, to demonstrate. அப்படிச்சொல்லு, what you say is true, you are in the right. சொல்லுகிறஇடத்திலேசொல்லு, tell it to whom you ought to tell it. சொல்லப்படாதகாரியம், a shameful thing, not proper to tell. சொல்லிமுடியாதது, unspeakable. நேரத்தைச்சொல்லிக்கொண்டார்கள், they appointed the time to one another. ஒருத்தனைச்சாப்பாட்டுக்குச்சொல்லுகிறது, to invite one to a meal.

சொவிசு v. சொகுசு.

சொழல் v. சுழல்.

சொள்ளை, சொள்ளைவிழுந்தது, சொள்ளைபிடித்தது, worm-eaten.

சொரணை, sense, feeling. சொரணையில்லாதவன், one that is senseless. சொரணிக்கிறது, to think, to consider; to feel.

சொறி, the itch. சொறிசொறியானது, what is scaly or rough-coated. சொறிகிறது, சொறிந்துகொண்டிருக்கிறது, to itch, to scratch, to claw or rub one's self. சொறியன், one that is scabby. சொறிவு, itching.

✦ சொர்க்கம், சொர்க்கலோகம், the eternal bliss, the other world; the paradise. சொர்க்கத்துக்குப்போகிறது, சொர்க்கபதவியடைகிறது, to go to heaven.

சொற்றிறம் v. சொல்.

சொற்பம், mean, little, slight.

✦ சொப்பனம், a dream. சொப்பனங்காண்கிறது, to dream.

சொலியம், a fell or skin.

சொர்ணம், சொன்னம், gold. சொர்ணமயம், solid gold, pure gold. சொர்ணதானம்பண்ணுகிறது, to bestow charity, to give alms.

சொன்னது v. சொல்லுகிறது.

சோகரியம், சோக்கியம் v. சவுக்கியம்.

சோகம் v. சோபம்.

✦ சோகி, a beggar.

சோகை, *a kind of* jaundice, a swelling of the body. சோகைமூஞ்சி, a swollen face. சோகையன், one who has that disease.

சோடம், சோடமண்டலம் v. சோழமண்டலம்.

சோடிக்கிறது, to adorn, to beautify. சோடிப்பு, சோடனை, adorning, dressing.

சோடசம், respect; civility. சோடசஉபசாரம்பண்ணுகிறது, to pay respect to great people.

சோடு, a pair, a couple; a coat of arms; things quite like to one another. சோடாய்ப்போகிறது, to go in company with one. சோடுபிரியாமலிருக்கிறார்கள், those two persons won't leave one another. சோடணிந்துசண்டைகொடுக்கிறது, to fight having put on a coat of arms. மேல்சோடு, stockings. ஒருசோடுபுறாக்குஞ்சு, a pair of young pigeons. இதுக்குச்சோடில்லை, this is a single one, there is one wanted to make a pair.

சோடை, முகச்சோடை, முகச்சோர்வு, a child's hankering to see the mother or the longing of the mother to see her child.

சோணைக்காது, large ear-laps not perforated.

சோணங்கிநாய், *a kind of* dog.

✦ சோதி, splendor, light. பரஞ்சோதி, heavenly light. சோதிச்சக்கரம், சோதிமண்டலம், the starry sky. சோதிசாஸ்திரம், astronomy; astrology. சோதிஷம், astrology. சோதிஷக்காரன், an astrologer. சோதிஷம்பார்க்கிறது, to prognosticate. சோதிமின்னல், lightning appearing usually on the horizon towards north-east before the monsoon sets in.

சோதிக்கிறது, சோதித்துப்பார்க்கிறது, to try; to search; to tempt. சோதித்தறிந்தவன், one who has inquired into a thing. சோதனை, a trial; a search; a temptation; an affliction. சோதனைபார்க்கிறது, to try. சோதனைகொடுக்கிறது, to permit things to be searched. சோதனைக்காரன், a tempter.

சோத்து, midnight; a deep sleep.

சோத்தியம், wondering, admiration. சோத்தியம்போகிறது, சோத்தியப்படுகிறது, to wonder *at a thing*.

சோநுபோகிறது v. சோருகிறது.

சோநடு, impediments, embroiling.

சோபம், சோகம், a swoon, swooning. சோபம்போடுகிறது, சோபிக்கிறது, to swoon away, to get a swooning. சோபந்தெளிந்தது, the swoon is over.

✦ சோபனம், a good state; a joy, a festivity. ஒருத்தனுக்குச்சோபனம்பாடுகிறது, to congratulate one with a poem.

✦ சோமன், the moon. சோமசூரியர், sun and moon. சோமன்னைக்கு, next monday.

சோமன், a cloth which an Indian girds himself with. சோமன்சோடு, a pair of such clothes in one piece. சோமன்கட்டுகிறது, to gird a cloth round about the waist.

சோம்பல், சோம்பு, சோம்பேறி, laziness, slowness. சோம்பற்காரன், சோம்பலாளி, சோம்பேறி (*fem.* சோம்பி) சோம்பைக்காரன், a lazy person. சோம்புமுறிக்கிறது, to stretch one's self and lay hold of some body.

சோம்பு; *a kind of* anise.

சோம்புகிறது, to be slack and lazy.

சோரம், சோரத்தனம், thievery; whoring. சோரம்போகிறது, சோரமாயத்திரிகிறது, to go a-wenching or whoring. சோரப்பார்வை, thievish looks. சோரமார்க்கம், a whorish life. சோரக்காரன், சோரன், சோரகன், a thief; a villain. சோரபுருஷன்; a whoremonger, an adulterer. சோரஸ்திரி, a whore, an adulteress.

சோராவரிபண்ணுகிறது, to vex, to use violence.

சோருகிறது, சோர்ந்துபோகிறது, to languish or faint; *a cloak's* slipping down from the shoulders. வஸ்திரஞ்சோர்ந்துகிடக்கிறது, to lie uncovered the clothes being fallen off or got loose. ஒருத்தனைக்கைசோரவிடுகிறது, to forsake one.

சோர்வு (சோர்வாய்) போகிறது, to be lost; to disappear.

சோலி, a troublesome or difficult business. சோலியாய்க்கிடக்குது, the business lies entangled, it is not yet decided. சோலியிலேயகப்படுகிறது, to be embroiled with a litigation. சோலிபண்ணுகிறது (இடுகிறது) to lay an impediment in the way. சோலிக்காரன், one who uses to embroil things.

சோலை, a grove. சோலைவைக்கிறது, to plant a grove of trees.

சோவை v. சோகை.

சோவென்றுபெய்கிறது, to rain hard.

சோழகம், south-wind.

சோழமண்டலம், Coromandel.

சோழியச்சாதி, *a certain tribe*. சோழியன், சோழியவெள்ளாழன், *one of that tribe*.

சோளம், முத்துச்சோளம், Indian corn, maize. காக்காய்ச்சோளம், *a species of smaller grain*.

சோளி, சோளிகை, a budget.

சோறு, boiled rice; the inward crummy part of *palmira-trees etc*. சோறாக்கிறது, சோறுசமைக்கிறது, to boil rice. சோறுபோடுகிறது (இடுகிறது) to serve up rice at meal. சோற்றுக்குச்சாகிறது, to be starved with hunger. அவனுக்குச்சோறிறங்கவில்லை, he cannot eat, the rice will not go down. சோற்றுப்பாளையம், the part of the camp where victuals are boiled. புற்றுச்சோறு, the nest of a kind of white ants.

சோனகன் (*fem*. சோனகத்தி) one of a low tribe among the Moors.

சோனைப்பெயல், a rain within the hills, whereof a part touches the neighbouring country.

ஞ

* ஞாபகம், memory; intellect, reason. அதுஎனக்குஞாபகமாயிருக்கவில்லை, I do not remember it, I cannot recollect it. ஞாபகமாய்ச்சொல்லுகிறது, to say with reason.

* ஞாயம், reason, justice, right, equity; a rule, a precept of morality; an affair, a matter, a point. ஞாயஞ்சொல்லுகிறது, to shew reason. ஞாயமாய், ஞாயப்படி, ஞாயமானபடி, agreeably to justice and equity. ஞாயந்தப்பி, ஞாயக்கேடாய், unjustly. ஞாயக்கேடுபண்ணுகிறது, to do injustice. ஞாயங்கேட்கிறது, to hear the cause, to enquire into the cause. ஞாயந்தீர்க்கிறது, to judge. ஞாயத்தீர்ப்பு, judgment. ஞாயக்காரன், ஞாயாதிபதி, a judge, a justice. ஞாயங்களைச்சொல்லுகிறது (சொல்லிக்காட்டுகிறது) to give precepts of morality. ஞாயமுள்ளவன், a righteous man.

ஞாயறு v. ஞாயிறு.

* ஞானம், wisdom. ஞானக்காரியம், a spiritual matter. ஞானமுள்ளவன், one that is wise. ஞானி, a wise man. ஞானபாரகன், a philosopher. ஞானத்திலேதெளிந்தவன் (யத்தினவன்) one who is very wise. ஞானத்தெளிவு, prudence, spiritual knowledge. ஞானப்பால், spiritual milk, divine doctrine. ஞானப்புத்தி, wisdom in godly things. ஞானஸ்நானம், the holy baptism, the washing of regeneration. ஞானஸ்நானங்கொடுக்கிறது, to baptize or christen. ஞானஸ்நானம்பெறுகிறது, to receive baptism, to be christened. ஞானஅர்த்தம், a mystical sense.

ட

டக்கணம், the Decan. டக்கணிப்பாஷை, the Decan language.

டக்கயம், டக்கையம், a flag.

டப்பை, a box for gathering the toll-money.

டம்பகம், pomp, ostentation.

டம்பம், டம்பத்தனம்; wickedness.

டம்மாரம், டமாரம், a brass-drum, a pair of kettle-drums. டமாரக்காரன், a kettle-drummer. டம்மாரமாடு, a bullock carrying both the kettle-drums and the drummer.

டாகுபோடுகிறது, to brand *cattle* with a red hot iron.

டாக்கு, petulancy, pride. டாக்கன், a petulant fellow.

டாப்பால், டப்பால், a foot-post, the tappal; trenches and works made by the beleaguerers. டாப்பால்நடத்துகிறது, to dig mines or to make trenches. டாப்பால்போடுகிறது (எடுக்கிறது) to make a line of circumvallation. டாப்பாலிலேவிழுந்துவெட்டுகிறது, to break into the enemy's camp. டாப்பால்முறிந்தது, the siege is raised.

டாப்பு, a catalogue, a list; a physician's receipt; a letter. பேர்டாப்பு, a list of people's names. டாப்பிலேபதிக்கிறது, to insert into the list. டாப்புகிறது, டாப்பிநடக்கிறது, to straddle, to walk straddlingly.

டால், colors, a flag. டால்டமாரம்போட்டுக்கொண்டுபோகிறது, to go with drums beating and colors flying.

டாவால் v. டாப்பால்.

டொங்கு, an hole in a tree etc.

டொம்பர், rope-dancers.

* டோல், a kind of a drum.

த

தகடு, a thin flat piece of metal; a plate. வெள்ளியைத்தகடடிக்கிறது, to plate a piece of silver; to beat it flat. பொற்றகடு, gold-plates.

தகப்பன், a father. தகப்பன்மார், the fathers. பெரியதகப்பன், the father's elder brother. சிறியதகப்பன், his younger brother.

தகமை v. தகுகிறது.

தகராது, தகறாறு, hindering, letting, belaying one's way, thwarting one's design. தகராதுபட்டகாரியம், a thing thwarted by a plea.

தகருகிறது, தகர்ந்துபோகிறது, to be broken (crushed) to pieces. தகரவாங்கிப்போடுகிறது, to raze *an hill, house etc.*; to take one's power or dignity away from him.

தகரை, *the name of a plant*. தகரைவிரை, *the seed of it, serving for dying linnen*. வெண்டகரை, *another kind of that plant*.

தகர்க்கிறது, தகர்த்துப்போடுகிறது, to break *a thing* to pieces.

தகழுகிறது v. தழுழுகிறது.

தகறாறு v. தகராது.

* தகனம், a combustion. தகனம்பண்ணுகிறது, தகனிக்கிறது, to burn *a corpse etc.* தகனப்பலி, a burnt-offering.

தகாது v. தகுகிறது.

தக்கிக்கிறது, to consume by fire. தக்கித்துப்போகிறது, to become digested.

தகலாயம், love and gratitude towards one. தகலாயக்காரன், a friend.

தகலிக்கிறது, தகலித்துப்போடுகிறது,

to cheat *one* by tricks.

